*கவனிக்க.-2019.07.26 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2135 - 2019 අගෝස්තු මස 02 වැනි සිකුරාදා - 2019.08.02

*2135 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *1862* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *1876* |

**கவனிக்க.-** (i) கம்பனிகள் (திருத்தம்) சட்டமூலம் 2019, யூலை மாதம் 19 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ - தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தம்) சட்டமூலம் 2019, யூலை மாதம் 26 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2019, ஓகத்து மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, ஓகத்து மாதம் 09 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*1859-B 81547-5,403 (2019/08)*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

***3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :***

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலூவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

***4. பணிக்கமர்த்தும் நியதிகள் :***

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

***6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :***

*6.1 எல்லூத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலூவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

***7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :***

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

***8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :***

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழராத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

## சட்ட உத்தியோகத்தர் (பதவிநிலை சேவை தரம் III) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்

கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு

கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்ட காலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம் கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழிற் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுவின் பதவி நிலை சட்ட உத்தியோகத்தர் பதவிக்கான 01 வெற்றிடத்தை பூர்த்தி செய்வதற்காக இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு முறை**.- அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றுக்கொண்டுள்ள விண்ணப்ப தாரர்களுள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் கட்டமைப்பான நேர்முகப் பரீட்சைச் சபையினால் நடாத்தப்படும் கட்டமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரி பதவி வெற்றிடத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார். அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட (இலக்கம் 06 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளிகள் வழங்கப்படும் நடபடிமுறைக்கு அமைய கட்டமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

நியமனம் செய்யப்படும் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

2. **தேவையான தகைமைகள்**.

(i) *கல்வி/தொழிற் தகைமைகள்*

உச்ச நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்திருத்தல்.

(ii) *அனுபவம்*

உச்ச நீதிமன்றில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட பின் மூன்று (03) வருடங்களுக்குக் குறையாத காலப்பகுதி சட்டத்தரணியாக செயற்பாட்டு ரீதியில் தொழில் அனுபவத்தைப் பெற்றிருத்தல். (செயற்பாட்டு ரீதியில் தொழில் அனுபவம் பெற்றுக்கொண்டுள்ளதை உறுதிப்படுத்துவதற்காக முன்வைக்கப்படும் ஆவணங்களின் அனுபவம் பெறப்பட்ட காலம், திகதி மற்றும் உத்தியோகபூர்வ முத்திரையைத் தெளிவாகக் குறிப்பிட்டு நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)

அல்லது

உச்ச நீதிமன்றில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட பின் அரச நிறுவனமொன்றில் மூன்று (03) வருடங்களுக்குக் குறையாத காலப்பகுதி சட்டத்துறையில் பின்வரும் செயற்பாடுகள் தொடர்பில் அனுபவம் பெற்றுக்கொண்டிருத்தல்.

(1) வழக்குகள் தொடர்பான சட்ட அலுவல்கள் மற்றும் சட்ட மா அதிபர் திணைக்களத்துடன் ஒருங்கிணைப்புடன் செயற்படல்.
(2) ஒப்பந்தங்கள் தொடர்பான சட்ட அலுவல்கள்
(3) சம்பந்தப்பட்ட சட்ட ஏற்பாடுகள் தொடர்பான சட்ட அலுவல்கள்
(4) சட்டமூலங்கள், சுற்றுநிருபங்கள், ஒழுங்குவிதிகள் போன்ற சட்ட ஆவணங்களைத் தயாரிக்கும் அலுவல்கள்
(5) பல்வேறு நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும் சட்ட அலுவல்களுடன் தொடர்புடைய விசாரணைகள் தொடர்பான அலுவல்கள்.

(குறித்த விடயங்கள் செயலாளர், திணைக்களத் தலைவரால் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

(அரசாங்க சேவை/மாகாண அரசாங்க சேவையின் MN 01 அல்லது அதற்கு மேலான சம்பள அளவுத் திட்டத்தையுடைய பதவியின் சேவையில் நிரந்தரப்படுத்தப்பட்டுள்ள மற்றும் 10 ஆண்டுகள் செயற்பாட்டு ரீதியான திருப்திகரமான சேவையையுடைய உத்தியோகத்தர்களுக்கு இப் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.)

(iii) *உடல் ரீதியான தகைமைகள்*

விண்ணப்பதாரிகள் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் பணிபுரிவதற்கும், பதவியின் அலுவல்களை நிறைவேற்றக்கூடிய உடல் மற்றும் உள ரீதியில் போதியளவு ஏற்புடையவராகவும் இருக்க வேண்டும்.

(iv) *வேறு தகைமைகள்*

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரி நல்லொழுக்கம் உடையராக இருக்க வேண்டும்.
- விண்ணப்பம் கோரப்படும் கடைசித் திகதியின்போது ஆட்சேர்ப்புச் செய்வதற்கான எல்லாத் தகைமைகளையும் பெற்றிருக்க வேண்டும்.
- ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றவராக இருக்க வேண்டும்.

**3. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகளும் சேவைக்கான நிபந்தனைகளும்**

(i) இப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் உடையது. ஓய்வூதிய வழங்கல் முறைமை தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கையளவிலான தீர்மானங்கள் தொடர்பில் நீங்கள் உடன்பட வேண்டும். நீங்கள் விதவைகள்/விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதிய முறைக்கு பங்களிப்பு வழங்க வேண்டும். அரசாங்கத்தினால் அடிக்கடி பணிக்கப்படும் முறையில் அது தொடர்பில் உங்களால் பங்களிப்பு நிதி வழங்கப்பட வேண்டும்.

(ii) இந் நியமனம் 03 வருடகால தகுதிகாண் காலத்தைக் கொண்டதாகும். பதவி நியமனம் வழங்கப்பட்ட 03 வருடங்களுக்குள் ஆட்சேர்ப்பு நடபடிமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

(iii) 2014.01.21ஆந் திகதியுடைய பொது நிருவாக சுற்றுநிரும் 01/2014 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் அதனுடன் இணைந்த சுற்றுநிருபங்களின் ஏற்பாடுகளுக்கு அமைய இப் பதவியில் சேர்த்துக்கொள்ளப்பட்டு ஐந்து ஆண்டுகள் பூர்த்தியடைவதற்கு முன் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட மொழிக்கு மேலதிகமாக அடுத்த அரசகரும மொழி தொடர்பான தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அரசகரும மொழி அல்லாத வேறு மொழிமூலம் சேவையில் சேர்ந்திருக்கும் உத்தியோகத்தர்கள் தகுதிகாண் காலத்திற்குள் குறித்த அரசகரும மொழியில் தேர்ச்சி பெற வேண்டும்.

(iv) இந் நியமனம், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடபடிமுறை ஒழுங்குவிதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை, நிதிப் பிரமாணக் குறிப்பு மற்றும் திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் உடன்பட்டதாகும்.

**4. வயது எல்லை.**- விண்ணப்பதாரர் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியின்போது 21 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(உள்ளக விண்ணப்பதாரிகள் தொடர்பில் உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது)

5. **சம்பள அளவுத் திட்டம்.**- (இச் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய அதன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) ரூபா 47,615 - 10 × 1335 - 8 × 1630 - 17 × 2170 - ரூபா 1,10,895.00 (மாதாந்த) சம்பள அளவுத் திட்டம் இப் பதவிக்கு உரித்தாகும். (2016.02.25 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றுநிருபம் இலக்கம் 3/2016 இன் SL-1-2016 ஆம் இலக்க சம்பளத்தொகுதியாகும்.

06. கட்டமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சைக்கு பின்வரும் நடபடிமுறையின் கீழ் புள்ளிகள் வழங்கப்படும்.

| தொடர் இலக்கம் | பாடங்கள் | புள்ளிகள் | அதிகூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | மேலதிக கல்வித் தகைமைகள் | | 25 |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட இத் துறைசார்ந்த பட்டப் பின்படிப்பு | 25 | |
| | அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் இத் துறைசார்ந்த பட்டப் பின்படிப்பு டிப்ளோமா அல்லது பின்படிப்பு சட்ட டிப்ளோமா (ஒரு வருடத்திற்குக் குறையாத) | 20 | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட சட்டம் பற்றிய பட்டம் | | |
| | • முதலாம் வகுப்பு சித்தி தொடர்பில் | 15 | |
| | • இரண்டாம் தர உயர் சித்தி தொடர்பில் | 10 | |
| | • இரண்டாம் தர கீழ் சித்தி தொடர்பில் | 05 | |
| | சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டின் முதலாம் தர சித்தி தொடர்பில் | 10 | |
| | சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டின் இரண்டாம் தர சித்தி தொடர்பில் | 05 | |
| | **குறிப்பு**: கௌரவ சித்தியுடன் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பின் மட்டும் 05 புள்ளிகள் வழங்கப்பட வேண்டும். | | |
| | (அதிகூடிய ஒரு தகைமை தொடர்பில் மட்டும் புள்ளிகள் வழங்கப்படும்) | | |
| 02 | மேலதிக தொழில் அனுபவம் | | 35 |
| | (i) மேலதிக தொழில் தகைமைகள் | 10 | |
| | அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சம்பந்தப்பட்ட துறைசார்ந்த ஒரு வருடத்திற்கு மேலான டிப்ளோமா தொடர்பில் (ஒரு டிப்ளோமா தொடர்பில் 10 புள்ளிகள் வீதம்) | | |
| | அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சம்பந்தப்பட்ட துறைசார்ந்த 06 மாதங்களுக்கு மேற்பட்ட ஒரு வருடத்திற்கு குறைவான டிப்ளோமா பாடநெறி தொடர்பில் (ஒரு டிப்ளோமா தொடர்பில் 05 புள்ளிகள் வீதம்) | | |
| | அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சம்பந்தப்பட்ட துறைசார்ந்த 03 மாதங்களுக்கு மேற்பட்ட 06 மாதங்களுக்குக் குறைவான சான்றிதழ் நிலை பாடநெறி தொடர்பில் (ஒரு பாடநெறிக்கு 03 புள்ளிகள் வீதம்) | | |
| | (இலக்கம் 01 இன் கீழ் புள்ளிகள் வழங்கப்பட்ட சாற்றிதழ்கள் தவிர்ந்த வேறு) | | |

| தொடர் இலக்கம் | பாடங்கள் | புள்ளிகள் | அதிகூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| | (ii) மேலதிக அனுபவம்<br>அரசாங்க அல்லது தனியார் துறையில் சட்டத்தரணியாக பணிபுரிந்த அனுபவம் ஒரு வருடம் தொடர்பில் 05 புள்ளிகள் வீதம் 25 புள்ளிகள்<br>06 வருடங்களுக்கு மேல் மற்றும் ஒருவருடத்திற்குக் குறைவான : 02 புள்ளிகள்<br>(அடிப்படைத் தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான சட்டத்தரணியாக பணிபுரிந்த 03 வருட காலம் தவிர்ந்த)<br>(20 வருடங்களுக்குக் குறையாத சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள சட்டத்தரணி அல்லது சனாதிபதி சட்டத்தரணி அல்லது ஒரு நீதிபதியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழின் மூலம் மேலதிக அனுபவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)<br>(மேற்குறிப்பிட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அரசாங்க உத்தியோகத் தர்கள் அல்லது தனியார் துறையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் மேலதிக அனுபவத்தை உறுதிப்படுத்தும்போது விண்ணப்பதாரர் சட்டத்துறைசார்ந்த பதவியில் இருந்துவருவதாக சேவைச் சான்றித ழொன்று/சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்) | 25 | |
| 03 | தகவல் தொழில்நுட்பம் பற்றிய அறிவு<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டமொன்றில் தகவல் தொழில்நுட்பத்தை பிரதான பாடமொன்றாகக் கற்றல்.<br>அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தில் 01 வருடத்திற்குக் குறையாத அல்லது 1500 மணித்தியாலங்களைக் கொண்ட தகவல் தொழில்நுட்பம் பற்றிய டிப்ளோமா பாடநெறி தொடர்பில்<br>அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தில் தகவல் தொழில்நுட்பம் பற்றிய சான்றிதழ் நிலை பாடநெறி தொடர்பில்<br>• 06 மாதம் /720மணித்தியாலம்<br>• 03 மாதம் /360 மணித்தியாலம்<br>(உச்ச நிலைத் தகைமைக்கு புள்ளிகள் வழங்கப்படும்) | 10<br>07<br><br>05<br>03 | 10 |
| 04 | மொழித் தேர்ச்சி<br>ஆங்கில மொழி மூலம் கற்ற பட்டப் பின்படிப்பு/பட்டம்/சட்டத்துறை பட்டப் பின்படிப்பு/சட்டத்துறைப் பட்டம்<br>(சம்பந்தப்பட்ட பரீட்சை வினாப்பத்திரங்கள் யாவும் ஆங்கில மொழிமூலம் பதிலளிக்கப்பட்டிருக்க வேண்டும்)<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தில் ஆங்கில மொழி பற்றிய டிப்ளோமா பாடநெறி தொடர்பில் (01 வருடம் அல்லது 1500 மணித்தியாலங்கள்)<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறு வனத்தில் ஆங்கில மொழி பற்றிய சான்றிதழ் நிலை பாடநெறி தொடர்பில்<br>- 06 மாதம் /720மணித்தியாலம்<br>- 03 மாதம் /360 மணித்தியாலம்<br>(உச்ச நிலைத் தகைமைக்கு மட்டும் புள்ளிகள் வழங்கப்படும்) | 15<br>10<br><br>07<br>05 | 15 |

| தொடர் இலக்கம் | பாடங்கள் | புள்ளிகள் | அதிகூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 05 | நேர்முகப் பரீட்சையில் காட்டும் தகைமைகள் | | 15 |
| | (i) பொது அறிவும் புலமையும் | 05 | |
| | (ii) சட்டத்துறையின் நவீன மாற்றங்கள் பற்றிய அறிவு | 05 | |
| | (iii) தெளிவாக கருத்து வெளியிடும் இயலுமையும் ஆளுமையும். | 05 | |
| | மொத்தம் | | 100 |

7. **பரீட்சாத்தியின் அடையாளம்.**- எல்லா வகையிலும் முழுமையான விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள பரீட்சார்த்திகள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். கட்டமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சையின்போது சகல சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகளும் முறையாக அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கட்டமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சையின்போது தனது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளரால் வழங்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட தேசிய அடையாள அட்டை
(ii) அங்கீகரிக்கப்பட்ட கடவுச் சீட்டு

8. **விண்ணப்பங்கள் முன்வைக்கப்படவேண்டிய முறை.**-

(i) விண்ணப்பங்கள் 19. 08. 2019 ஆந் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

செயலாளர்,
கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு,
இலக்கம் 1001/1,
லோஹோர் சீமாட்டி கடன் நிதியக் கட்டடம்,
சித்தம்பலம் ஏ காடினர் மாவத்தை,
கொழும்பு 02.

(ii) முன்வைக்கப்பட வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரி ஒன்று அறிவித்லின் இறுதியில் இணைக்கப் பட்டுள்ளது. விண்ணப்பதாரர் தங்கள் விண்ணப்பங்களை A4 அளவான கடதாசியில் தயாரித்தல் வேண்டும் என்பதுடன் 01 தொடக்கம் 08 வரையான விடயங்களை முதற்பக்கத்திலும் 09 தொடக்கம் 12 வரையான விடயங்களை இரண்டாம் பக்கத்திலும் மீதியை அடுத்த பக்கத்திலும் அமையுமாறு தயாரித்து தனது கையெழுத்தில் பூர்த்திசெய்யப்படவேண்டும்.

(iii) விண்ணப்பம் அனுப்பிவைக்கப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுவின் சட்ட உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவத்திலுள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்க பாடசாலை அதிபர் /சமாதானநீதவான்/ சட்டத்தரணி/ நொத்தாரிஸ் /முப்படையின் அதிகாரமுடைய அதிகாரியொருவர் அல்லது 47,615.00 அல்லது அதற்கு மேலான மாதாந்த ஒருங்கிணைந்த சம்பளத்தைப் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையின் நிரந்தர பதவியில் இருக்கும் உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(v) தற்போது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை தான் பணிபுரிந்து வரும் திணைக்களத்தைச் சேர்ந்த திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

(vi) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். காணாமல் போதல் மற்றும் காலதாமதம் அடைதல் பற்றிய முறையீடுகள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

9. **பொய்யான தகவல்கள் முன்வைக்கப்படல்.**- உங்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல் பொய்யானதென அல்லது தவறானதென நியமனம் வழங்கப்படுவதற்கு முன் தெரியவந்தால் உங்கள் நியமனம் இரத்துச் செய்யப்படும். அவ்வாறு பொய்யான அல்லது தவறான தகவல் பற்றி நியமனம் வழங்கப்பட்ட பின் தெரியவந்தால் அதனுடன் தொடர்புடைய நடபடிமுறைகளுக்கு அமைய பதவி நீக்கம் செய்யப்படுவீர்கள்.

10. பதவி வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது பதவி வெற்றிடங்களை நிரப்பாது விடும் உரிமை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கே உள்ளது.

11. இவ்வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையே ஏதேனும் முரண்பாடுகள் காணப்படுமாயின் அப்போது சிங்கள மொழி மூல குறிப்பு மேலோங்கி நிற்கும்.

12. இவ் அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஒரு விடயம் தொடர்பில் அல்லது ஆட்சேர்ப்பு செய்யப்படும் நடபடிமுறைகள் தொடர்பில் ஏதேனும் குழப்பநிலை ஏற்படுமாயின் அது தொடர்பிலான அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக அமையும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்புரைக்கு அமைய,

செயலாளர்,
கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்ட காலமாக
இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம் கூட்டுறவுத்துறை
அபிவிருத்தி, தொழிற் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு.

2019, யூலை 22.

மாதிரி விண்ணப்பப் படிவம்

| |
|---|
| |

(அலுவலக தேவைக்கு)

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சட்ட உத்தியோகத்தர்(பதவிநிலை சேவை தரம் III)
பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பப் படிவம்

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்

| | |
|---|---|
| சிங்களம் | |
| தமிழ் | |
| ஆங்கிலம் | |

01. விண்ணப்பதாரரின் பெயர் :

(i) முதல் எழுத்துக்களை பின்னர் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் : ..............................................................................
..................................................................................................................................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) :

(ii) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்): ..............................................................................................
..................................................................................................................................................................

(iii) முழுப் பெயர் (சிங்களம்/தமிழ்) :..............................................................................................................
..................................................................................................................................................................

02. முகவரியும் தொலைபேசி இலக்கமும் :

(i) அலுவலக முகவரி :...............................................................................................
தொலைபேசி இலக்கம்:...........................................................................................

(ii) தனிப்பட்ட முகவரி:........................................................................................
தொலைபேசி இலக்கம்: கையடக்கம் :.................................... வீடு : ...........................

03. பிறந்த திகதி :
ஆண்டு ........................ மாதம் :..................................திகதி :.......................

04. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு வயது:
வருடங்கள்........................ மாதங்கள் : .................................. நாட்கள்:................................

05. தேசிய அடையாள அட்டை இலக்கம்: ......................................................................

06. பெண்/ஆண் :...................................................................................

07. திருமணமான/திருமணமாகாத/விதவை :......................................................................

08. கல்வித் தகைமைகள் :...............................................................................

(i) சட்டம் பற்றிய பட்டப் பின்படிப்பு/பட்டம் பெறப்பட்ட பல்கலைக்கழகம், தரச் சித்தி, அங்கீகாரத் திகதியும் மொழி மூலமும் :
..........................................................................................................................

(ii) உச்ச நீதிமன்றில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமானம் செய்துகொண்ட திகதி : ........................................

09. தொழில் தகைமைகள் :

| பரீட்சை/டிப்ளோமா | ஆண்டு | கால எல்லை | பாடம் | சித்தி | நிறுவனம்/பல்கலைக் கழகத்தின் பெயர் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |

10. அனுபவம் பற்றிய விபரங்கள்: (சேவைச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்)

| பணிபுரிந்த நிறுவனம் | பதவி மற்றும் சம்பளக் குறியீடும் சம்பள அளவுத் திட்டமும் | பணிபுரிந்த காலம் |
|---|---|---|
| | | |
| | | |

11. கணினி அறிவு பற்றிய தகைமைகள் :
(i) பட்டம்: ...........................................................................................
(ii) டிப்ளோமா (பெயரும் கால எல்லையும்) : .................................................................
(iii) சான்றிதழ் பாடநெறி (பெயரும் கால எல்லையும்):.................................................

12. ஆங்கில மொழி தொடர்பில் பெற்றுக்கொண்டுள்ள தகைமைகள்:

(i) பட்டம் :............................................................................
(ii) டிப்ளோமா (பெயரும் கால எல்லையும்) :............................................
(iii) சான்றிதழ் பாடநெறி (பெயரும் கால எல்லையும்) :...............................................

13. நீங்கள் ஏதேனும் குற்றச்சாட்டுக்கு நீதிமன்றத்தில் குற்றவாளியாக காணப்பட்டுள்ளீர்களா?
.............................................................................

என்னால் இந்த விண்ணப்பப் படிவத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன். இதில் தரப்பட்டுள்ள ஏதேனுமொரு விபரம் தவறானது அல்லது பொய்யானது என

நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் கண்டறியப்பட்டால் இந்தப் பதவிக்கு தகுதியற்றவனாவேன் என்றும் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் கண்டறியப்பட்டால் எவ்வித நட்டஈடுகளும் வழங்கப்படாது சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதனையும் நன்கறிவேன்.

.............................................

திகதி: ............................ விண்ணப்பதாரரின் கையொப்பம்

14. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:

இங்கு கையொப்பமிட்டுள்ள................................................................. என்ற இடத்தில் வதியும். திரு./திருமதி/செல்வி ........... ...............................................................எனக்கு தனிப்பட்ட முறையில் அறிமுகமானவர் எனவும் அவர் ..................... ஆம் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டாரெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

.............................................

உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

உறுதிப்படுத்துபவரின் பெயர் : ...................................
பதவி : .......................................
முகவரி :........................................
திகதி : ......................................

15. திணைக்களம்/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்:
(தற்போது அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கு மட்டும் ஏற்புடையது)

இவ் அமைச்சில்/திணைக்களத்தில்/ நிறுவனத்தில் பணிபுரிந்துவரும் திரு./திருமதி / செல்வி .............................. தற்போது ............................................. பதவியில் பணிபுரிந்துவருவதாகவும் அவரின் வேலையும் நடத்தையும் திருப்தியானதெனவும் இவருக்கெதிரான ஒழுக்காற்று விசாரணைகள் ஏதுமில்லை என்பதுடன் அவ்வாறு விசாரணைகளை முன்னெடுக்கும் அபிப்பிராயம் ஏதுமில்லையெனவும் உறுதிப்படுத்துகின்றேன். இவர் இப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் இச் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது.

.............................................

திணைக்களத் தலைவரின்
கையொப்பமும் உத்தியோகபூர்வ
முத்திரையும்

உறுதிப்படுத்துபவரின் பெயர் : ..................................
பதவி : .......................................
முகவரி :........................................
திகதி : ......................................

08-239

## காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு

காணி எடுத்தல் மீளாய்வுச் சபையின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத வகுதியின் சேவை வகுப்பு 02, சுருக்கெழுத்தாளர் பதவிக்கு விண்ணப்பம் கோருதல்

காணி மற்றும் பாராளுமன்ற அமைச்சின் கீழ் நடாத்தப்படும் காணி எடுத்தல் மீளாய்வுச் சபையின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத வகுதியின் சேவை வகுப்பு 02 சுருக்கெழுத்தாளர் பதவியின் பின்வரும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்குரிய தகைமைகளை பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர் | வெற்றிடமாகவுள்ள பதவிகள் |
|---|---|
| சுருக்கெழுத்தாளர் (சிங்களம்) | 02 |
| சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) | 01 |

இவ்வறிவித்தலின் இறுதியிலுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2019.08.23 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு, இல. 1200/6, 'மிஹிகத மெதுர', இரஜமல்வத்த ஒழுங்கை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சுருக்கெழுத்தாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல்" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

***குறிப்பு.***- விண்ணப்பமொன்று அல்லது அது தொடர்பான ஆவணமொன்று தபாலில் காணாமல் போனதாக அல்லது தாமதமாகியதாக செய்யப்படுகின்ற முறைபாடுகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டா. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களை தாமதம் செய்வதனால் ஏற்படக்கூடிய நட்டங்களை விண்ணப்பதாரியே பொறுப்பேற்றல் வேண்டும்.

01.**சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் முறை** .- காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தின்படி நிறுவனமொன்றின் மூலம் நடாத்தப்படுகின்ற தொழிற்சார் பரீட்சையொன்றின் மூலம் பெற்றுக்கொள்கின்ற புள்ளிகள் மற்றும் இந்த அமைச்சின் செயலாளரின் மூலம் நியமிக்கப்படுகின்ற தகைமை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சை சபையின் மூலம் வழங்குகின்ற புள்ளிகள் ஆகிய இரண்டிலும் பெற்றுக்கொள்கின்ற முழுப் புள்ளிகளில் திறமைப்பட்டியலின் தொடர்முறையின் அடிப்படையிலும் காணப்படுகின்ற வெற்றிடங்களின் அடிப்படையிலும் தெரிவு செய்யப்படும். நியமிக்கப்படுகின்ற எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி நியமன அதிகாரியின் கட்டளையின்படி தீர்மானிக்கப்படும். ஏதாவது சில வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களும் பூர்த்தியாக்காமல் இருப்பதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

02.**சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்**:

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும்.

**குறிப்பு**: எதிர்காலத்தில் ஓய்வூதிய முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானத்திற்கு கட்டுப்படுதல் வேண்டும். விதவைகள், அநாதைகள்/தபுதாரர் நிதியத்திற்கு ஓய்வூதிய சம்பள அளவுத்திட்டத்திற்கு/விதவை, தபுதாரர் மற்றும் அநாதை ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற முறைக்கேற்ப உத்தியோகத்தரால் இதற்காக பங்களிப்புத் தொகை செலுத்தப்படல் வேண்டும்.

(ii) இப்பதவியில் நியமனம் பெறும் உத்தியோகத்தர் மூன்று (03) வருட தகுதிகூர் காலத்திற்கு உட்படுவர். அந்த மூன்று (03) வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 01/ 2014 மற்றும் அதற்கு நேரொத்த சுற்றறிக்கைகளுக்கு அமைய, ஐந்து (05) வருடத்திற்குள் மொழி தொடர்பாக தேர்ச்சி மட்டத்தை பெற்றுக்கொள்ளல் வேண்டும். அரசகரும மொழியல்லாத மொழி மூலமொன்றில் சேவையில் சேர்ந்த உத்தியோகத்தர்கள் 03 வருட காலத்துள் அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன் மற்றைய அரசகரும மொழித்தேர்ச்சியை ஐந்து (05) வருடத்திற்குள் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும், அரசாங்கத்தினால் அவ்வப்போது, ஆணைக்குழுவின் ஏனைய சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கும், நிதி ஒழுங்குவிதிகளுக்கும், திணைக்கள கட்டளைகளுக்கும் இந்த நியமனம் உட்பட்டிருக்கும்.

03.**சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்கு 2016.02.25 ஆந் திகதிய 03/2006 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின்படி சுருக்கெழுத்தாளர் பதவியின் III, II மற்றும் I ஆம் தரங்களுக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 27,140- 10 × 300 -11 ×350 - 10 ×495 - 10 × 660 ரூபா 45,490 (சம்பள குறியீட்டு இலக்கம் - MN 1-2016) ரூபா 30,490 இற்கு அப்பால் செல்வதற்காக II ஆம் தரத்திலான பதவியுயர்வு பெறுவதற்கும், ரூபா 34,485 இற்கு அப்பால் செல்வதற்காக I ஆம் தரத்திலான பதவியுயர்வு பெறுவதற்கும் தேவையானது. குறித்த சுற்றறிக்கையில் II ஆம் அட்டவணையின்படி நியமனம் செயல்வலுப்பெறும் திகதியிலிருந்து கொடுப்பனவு வழங்கப்படும்.

04. **தகைமைகள்** :

(i) **கல்வித் தகைமைகள்**.- சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் இன்னும் இரண்டு பாடங்களுக்கு சித்தி பெறுபேறுகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொது தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் மற்றும் கல்விப் பொதுத் தராதர (உயர் தரம்) பரீட்சையில் ஆகக் குறைந்தது ஒரு பாடத்திலாவது (01) (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்.

(ii) **தொழில்சார் தகைமைகள்**.- மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப் பட்ட நிறுவனமொன்றில் சுருக்கெழுத்து தொடர்பான NVQ 3 மட்டத்திலான பாடநெறியொன்றை பெற்றிருத்தல் அல்லது க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில் தட்டெழுத்து மற்றும் சுருக்கெழுத்து பாடத்திற்கு திறமைச் சித்தி பெற்றிருத்தல்.

05. **வயதெல்லை**.- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

06. **பிற தகைமைகள்**.-

- விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் மிகச் சிறந்த நல்லொழுக்கமுள்ளவராக இருத்தல் வேண்டும்.
- அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகளின் V அத்தியாயத்தின்படி அரசாங்க சேவையில் நியமனம் பெறுவதற்கு தகுதியற்றவராக இல்லாதிருத்தல் வேண்டும்.
- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எப்பிரதேசத்திலும் சேவை செய்வதற்கு தகுதியுடையவராக இருக்க வேண்டும்.

**குறிப்பு**.- சகல விண்ணப்பதாரிகளும் அறிவித்தலில்/வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற தினத்தில் அல்லது அதற்கு முன்னர் பதவிக்கு தேவையான தகைமைகளை சகல விதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

07. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் 2017.11.30 ஆந் திகதியிட்டு அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் ஏற்பாடுகளுக்கு அமைய நடாத்தப்படும் தகைமை மதிப்பிடுதல்/ மதிப்பிடு பரீட்சையில் மற்றும் தொழிற்சார் பரீட்சையில் விண்ணப்பதாரர் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் திறமை ஒழுங்குக்கு அமைய, தகைமையை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரி, சுருக்கெழுத்தாளர் பதவி தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.

08. தகைமை மதிப்பீட்டு பரீட்சையில் மற்றும் தொழிற் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் மூலப் பிரமாணங்கள் பின்வருமாறு:-

**தகைமையை பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சை**.-

| பரீட்சித்து புள்ளிகள் வழங்கப்படும் விடயங்கள் | அதிகூடிய புள்ளிகள் | தெரிவு செய்வதற்கு கவனிக்கப்படும் ஆகக்குறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| மேலதிக கல்வித்தகைமை | 30 | ஏற்புடையதாகாது. |
| மேலதிக தொழிற் தகைமை | 20 | |
| மொழித் தேர்ச்சி | 10 | |
| கணினி அறிவு | 15 | |
| அனுபவம் | 20 | |
| நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கப்படும் திறமைகள் | 05 | |
| மொத்தம் | 100 | |

**தொழிற் பரீட்சை :**

| விடயப் பரப்பு | காலம் | உச்ச புள்ளிகள் | சித்தியடைய வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் | பாடத்திட்டம் |
|---|---|---|---|---|
| சுருக்கெழுத்து (ஆங்கிலம்) | 01 ஒரு மணித்தியாலம் | 100 | 40% | 05 நிமிடங்களுக்குள் தொடர்ச்சியாக வாசிக்கப்படும் பந்தியொன்றை நிமிடமொன்றுக்கு 100 சொற்கள் வேகத்தில் சுருக்க குறிப்பெடுத்து அந்த குறிப்புக்களை ஒரு நிமிடத்திற்கு 08 சொற்கள் வேகத்தில் பொது முறையில் எழுதும் திறமையை அளந்து பார்க்கும் பரீட்சையாகும். |
| தட்டெழுத்து (ஆங்கிலம்) | 20 நிமிடம் | 100 | 40% | சுமார் 600 அளவிலான சொற்றொடரொன்று சரியாக 20 நிமிடங்களுக்குள் நிமிடமொன்றுக்கு 30 சொற்கள் வேகத்தில் தட்டச்சு செய்யும் திறமை பரீட்சிக்கும் பரீட்சையாகும். |
| சுருக்கெழுத்து (சிங்களம்) | 45 நிமிடம் | 100 | 40% | 05 நிமிடங்களுக்குள் தொடர்ச்சியாக வாசிக்கப்படும் பந்தியொன்றை நிமிடமொன்றுக்கு 100 சொற்கள் வேகத்தில் சுருக்கக் குறிப்பெடுத்து அந்த குறிப்புக்களை ஒரு நிமிடத்திற்கு 08 சொற்கள் வேகத்தில் பொது முறையில் எழுதும் திறமையை அளந்து பார்க்கும் பரீட்சையாகும். |
| தட்டெழுத்து (சிங்களம்) | 20 நிமிடம் | 100 | 40% | சுமார் 400 அளவிலான சொற்றொடரொன்று சரியாக 20 நிமிடங்களுக்குள் நிமிடமொன்றுக்கு 20 சொற்கள் வேகத்தில் தட்டச்சு செய்யும் திறமை பரீட்சிக்கும் பரீட்சையாகும். |

09. விண்ணப்பத்தினை பூர்த்தி செய்யும்போது மிகக் கவனத்துடன் சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். விண்ணப்பதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் எச் சந்தர்ப்பத்திலேனும் பொய்யானதென தெரியவரும் பட்சத்தில் அவர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவர்.

10. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க முடிவின் பிரகாரம் குறிப்பிட்ட திகதி அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பதாரிகளும் நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எனினும், அவ்வாறு அழைக்கப்படுவது விண்ணப்பதாரர் இப் பதவிக்கு தகுதிபெற்றுள்ளார் என்பதை ஏற்றுக்கொண்டதாக கருதப்படமாட்டாது.

11. விண்ணப்பதாரி விண்ணப்பப்படிவத்தை ஏ4 அளவிலான காகிதத்தில் 1 தொடக்கம் 11 (i) வரையிலான தகவல்களை முதற் பக்கத்தில் அமையுமாறும் 11 (ii) தொடக்கம் 16 வரையிலான தகவல்களை இரண்டாம் பக்கத்தில் அமையுமாறும் எஞ்சிய தகவல்களை மூன்றாம் பக்கத்தில் அமையுமாறும் விண்ணப்பத்தை தயாரித்துக்கொள்ளுதல் வேண்டும். அந்தந்த தகவல்களை தெளிவாக தனது கையெழுத்தினால் பூரணப்படுத்துதல் வேண்டும். உரிய மாதிரிப் படிவத்திற்கு அமைவாக விண்ணப்பங்களை தயாரித்துக்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு தயாரிக்கப்படாத, பூரணமற்ற, உரிய திகதிக்கு பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய வகையில் பூர்த்தி செய்யாமையால் ஏற்படும் நட்டத்தை விண்ணப்பதாரி பொறுப்பேற்றல் வேண்டும். விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

**கவனிக்க.**- விண்ணப்பத்தில் சான்றிதழ்கள் அல்லது பிரதிகள் எதுவும் இணைக்கப்படலாகாது. விண்ணப்பதாரரால் விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் அனைத்து தகைமைகளையும் உறுதிப்படுத்துகின்ற வகையில் சான்றிதழ்கள் நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

13. விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர்/சாமாதான நீதவான்/சத்திய பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி/பிரசித்த நொத்தாரிசு/முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் அல்லது பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது ரூபா 237,060 இற்கு குறையாத திரட்டிய சம்பளத்தைப் பெறுகின்ற அரசாங்க நிரந்தரப் பதவி வகிக்கின்ற உத்தியோகத்தர் ஒருவரால் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

14. பரீட்சார்த்தியின் அடையாளத்தினை உறுதிப்படுத்த பின்வரும் ஆவணங்களில் ஒன்றை நேர்முகப் பரீட்சைக் குழுவுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்:

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டை;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

15. வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது நிரப்பாமை தொடர்பான அதிகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குரியது அனைத்து விண்ணப்பதாரிகளும் இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொது சட்டதிட்டங்களுக்கு அமைந்தொழுக கட்டுப்படுள்ளனர். இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில பதப்பிரயோகங்களுக்கு மத்தியில் முரண்பாடு எழுமிடத்து சிங்கள மொழி அறிவித்தலுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளரின் கட்டளைப்படி,

டபிள்யூ. எச். கருணாரத்ன,
செயலாளர்,
காணி மற்றும் பாராளுமன்ற
மறுசீரமைப்பு அமைச்சு.

“மிஹிகத மெதுர”
இல. 1200/6, காணிச் செயலகம்,
இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப் படிவம்

## காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு

காணி எடுத்தல் மீளாய்வுச் சபையின் முகாமைத்துவ உதவியாளர் தொழிநுட்பம் அல்லாத வகுதியின் சேவை வகுப்பு 02, சுருக்கெழுத்தாளர் (சிங்களம்/ஆங்கிலம்) III தர பதவிக்கு விண்ணப்பம் கோருதல்

[ ]
அலுவலக உபயோகத்துக்காக

எழுத்து மூல பரீட்சைக்குத் தோற்றும் ஊடக மொழி - [ ]

சிங்களம் - 2/தமிழ் - 3/ஆங்கிலம் - 4 உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.

1. முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.
2. முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்):-----.
3. இறுதியில் வரும் பெயரை முதலிலும் மற்றைய பெயர்களின் முதலெழுத்துக்களை பின்னாலும் வரும் வகையில் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) (உதாரணம் : SILVA A.B.C.) :-----.
4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

5. நிரந்தர முகவரி :-----.

6. பால் : ஆண் - 0 ☐ பெண் - 1 ☐

7. பிறந்த திகதி : ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

8. 2019.08.23 ஆந் திகதிக்கு வயது :-----.

9. விவாகமானவரா/விவாகமாகாதவரா என்பது :-----.

10. தொலைபேசி இலக்கம் (இருப்பின்)

கையடக்க : ☐☐☐☐☐☐☐☐☐☐

நிலையான : ☐☐☐☐☐☐☐☐☐☐

11. பெற்றுக்கொண்டுள்ள கல்வித்தகைமைகள் :

(i) க. பொ. த. (சாதாரண தரம்)

முதலாம் தடவையில் பெறப்பட்ட பெறுபேறுகள்

வருடம் :-----. சுட்டெண் :-----.

| பாடங்கள் | சித்தி | பாடங்கள் | சித்தி |
|---|---|---|---|
| 01. | | 06. | |
| 02. | | 07. | |
| 03. | | 08. | |
| 04. | | 09. | |
| 05. | | 10. | |

(i) க. பொ. த. (உயர் தரம்)

வருடம் :-----. சுட்டெண் :-----.

| பாடங்கள் | சித்தி |
|---|---|
| 01. | |
| 02. | |
| 03. | |
| 04. | |

12. தொழிற் தகைமைகள் :-----.

13. பிற தகைமைகள் :-----.

14. பதவிக்குரிய தொழில் அனுபவம் :-----.

15. ஏதேனும் குற்றத்திற்கு நீதிமன்றத்தினால் தண்டிக்கபட்டவரா?

ஆம் ☐ இல்லை ☐

ஆம் எனில், விபரங்களைத் தருக :-----.

16. விண்ணப்பதாரியின் உறுதியுரை:

(அ) இவ் விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் உறுதிமொழிகிறேன். இங்கு ஏதாவதொரு பகுதியினை பூர்த்தி செய்யாது விடுதல் மற்றும்/ அல்லது தவறாக பூர்த்தி செய்தல் போன்ற காரணத்தினால் ஏற்படக்கூடிய இழப்பினை பொறுப்பேற்றுக் கொள்கிறேன். மேலும் இங்கு வழங்கப்பட்ட அனைத்து தகவல்களும் சரியாக பூர்த்திசெய்யப்பட்டுள்ளன என இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

(ஆ) இவற்றில் அடங்கியுள்ள விபரங்களில் ஏதேனும் பொய்யானவை அல்லது தவறானவை எனக் காணப்படின் தெரிவுக்கு முன்னராயின் தகைமை நீக்கம் செய்யப்படுவதற்கும் அல்லது தெரிவின் பின்னரோ பதவி நீக்கம் செய்யப்படுவதற்கும் கட்டுப்படுவேன்.

(இ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவல்களையும் பின்பு மாற்றஞ் செய்ய மாட்டேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் :

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி . . . . .. . . . .. . . . . . . . .. . . . என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும் அவர் என் முன்னிலையில் அவரது கையொப்பத்தினை இட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

உறுதிப்படுத்துபவரது :
பெயர் மற்றும் பதவிப் பெயர் :-----.
விலாசம் :-----.
பதவி முத்திரை :-----.

(விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர்/ சமாதான நீதவான்/ சத்திய பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/ பிரசித்தி பெற்ற நொத்தாரிசு/ முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் அல்லது பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது ரூபா 237,060 இற்கு குறையாத திரட்டிய சம்பளத்தைப் பெறுகின்ற அரசாங்க சேவையில் நிரந்தரமான உத்தியோகத்தர் ஒருவர் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

17. தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்கள்/மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்கள் பின்வரும் பகுதியினை பூர்த்தி செய்தல் வேண்டும்.

தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்கள் தொடர்பாக நிறுவனத் தலைவரின் சிபாரிசு

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ................................ என்பவர் தற்போது ............................. இவ்வமைச்சில்/ திணைக்களத்தில்/ நிறுவனத்தில்/ அலுவலகத்தில் ............ ஆந் திகதி முதல் ................ பதவியில் நிரந்தர/ தற்காலிக/அமய அடிப்படையிலான பதவியொன்றில் சேவை புரிகின்றார் எனவும், அவர் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார்/ நிரந்தரமாக்கப்படாதவர் என்றும், சேவைக் காலத்தில் ஒழுக்காற்று நடவடிக்கைக்காக குற்றவாளியாக்கப்படாதவர் என்றும், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அவரின் தனிப்பட்ட கோவைக்கு அமைவாக சரியானவை என்றும் அவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து தற்போது வகிக்கும் பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/முடியாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின்
கையொப்பமும் அலுவலக முத்திரையும்.

திகதி :----.

8-346

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சு

### இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் III ஆம் தரத்தைச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை – 2017 - (II) 2019

2024/ 35 ஆம் இலக்க 2017.06.21 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டவாறான இலங்கை அரசாங்க நூலகர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 03 ஆம் பின்னிணைப்பின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப இலங்கை அரசாங்க நூலகர் சேவை தரம் III இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை - 2019, நவெம்பர் மாதம் கொழும்பில் நடாத்தப்படும். இவ் அறிவித்தலின் படி குறித்த வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சைக்காக அரசாங்க சேவையின் இணைந்த சேவைக்குரிய அலுவலர்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

**குறிப்பு.-** இவ் வர்த்தமானி அறிவித்தலுக்கு ஒத்திசைவாக மாகாண அரசாங்க சேவையின் நூலகர் சேவை விண்ணப்பதாரிகளுக்கான ஏற்பாடுகள் உரிய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினாலும் ஏனைய நிறுவனங்களின் விண்ணப்பதாரிகளுக்கான ஏற்பாடுகள் அவ்வந்த நிறுவனங்களினாலும் வெளியிடப்படும்.

"ஒவ்வொரு மாகாண அரசாங்க சேவை மற்றும் ஏனைய நிறுவனங்களிலுள்ள அலுவலர்களின் விண்ணப்பங்களை வசதியாக இனங்காண்பதற்கென விண்ணப்பங்களின் தலைப்பில் உரித்தான சேவைகள் அல்லது நிறுவனத்தினைக் குறிப்பிடும் போது குறியீட்டு இலக்கங்கள் பாவிக்கப்படல் வேண்டும். அதற்கிணங்க "**இணைந்த சேவையின் அலுவலர்களுக்கான குறியீட்டு இலக்கம் 10**" ஆகும். அவ் இலக்கத்தினை விண்ணப்பத்தின் வலது பக்க மேல் மூலையில் தங்களுக்குரிய சேவை என்னும் இடத்தில் குறிப்பிடப்படல் வேண்டும்.

02. (i) இப் பரீட்சையானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுமென்பதுடன், பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பாக அவரால் விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டொழுகுதல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகளுக்கென விதிக்கப்பட்டுள்ள விதிகள் வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் பிரத்தியேகமாக அச்சிடப்பட்டுள்ளன. இவ் விதிகளை மீறுவோர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாவர்.

03. இப் பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பப்படிவம் இவ் அறிவித்தலின் இறுதியில் வெளியிடப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பத்தை மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய சரியாகவும், தெளிவாகவும் தயாரித்து தமது திணைக்களத்தலைவர் ஊடாக பதிவுத் தபாலில் 2019, செத்தெம்பர் மாதம் 02 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் " பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு (நிறுவனம்சார் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த.பெ.இல. 1503, கொழும்பு" எனும் முகவரியைச் சென்றடையும் வண்ணம் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பும் போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் மற்றும் தரம் என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

04. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம்.-** விண்ணப்பதாரிகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் தமது ஆளடையாளத்தைப் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் நிரூபித்தல் வேண்டும். இந் நோக்கத்திற்காக, கீழேயுள்ள ஆவணங்களுள் எவையேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்:-

(i) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு;
(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுள் ஏதாவது ஒன்றையேனும் சமர்ப்பிக்க முடியாத விண்ணப்பதாரியினது பரீட்சார்த்த உரிமை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் பேரில் இரத்துச் செய்யப்படலாம்.

05. **விண்ணப்பங்கள்** - விண்ணப்பங்கள் "ஏ4" அளவிலான ஒரு தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து இல. 1.0 தொடக்கம் 6.0 வரை முதல் பக்கத்திலும் இல. 7.0 தொடக்கம் 10.0 வரை இரண்டாம் பக்கத்திலும் அமையும் வண்ணம் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பம் தட்டச்சில் பொறிக்கப்பட்டு அனுப்பப்படலாம் ஆனால் அது சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப அமையாத விண்ணப்பங்களும், பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருத்தல் பயனுள்ளதாகும். பரீட்சை விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும். முழுமைப்படுத்திய விண்ணப்பம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்ததாக உள்ளதா எனவும் மற்றும் சகல தகவல்களையும் உள்ளடக்கி சரியாக நிரப்பப்பட்டுள்ளதா எனவும் உரிய பரீட்சைக்

கட்டணம் செலுத்தப்பட்டு அதன் விபரங்களை விண்ணப்பத்தில் உள்ளடக்கி பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா என்பது பற்றியும் விண்ணப்பதாரியினால் பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும். விண்ணப்பப்படிவம் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் தரம் III இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை -2017 (II) 2019 " எனக் குறிப்பிடவும்.

**போலியான தகவல்களுக்கான தண்டனை**.– விண்ணப்பத்தினை பூரணப்படுத்தும் போது மிகக் கவனமாக சரியான தகவல்களை நிரப்புதல் வேண்டும். பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பரீட்சார்த்த நிலையை இரத்துச்செய்ய முடியும்.

முதல் முறை இப் பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. எனினும் அடுத்து வரும் தடவைகளில் தோற்றும் அலுவலர்கள் சகல பாடங்களுக்கும் தோற்றுவதாயின் ரூபா. 500 உம் தனியாக ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் ரூபா. 250 உம் பரீட்சைக் கட்டணமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு வரவு வைத்து நாட்டின் எந்தவொரு தபாலகம் /உப தபாலகம் அல்லது மாவட்ட/ பிரதேச செயலகத்துக்கோ செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றினை தம்வசம் வைத்திருத்தல் பிரயோசனமாகும். இப் பரீட்சைக் கட்டணத்திற்கு மேலதிகமாக எதுவித அறவிடலும் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன். எக்காரணம் கொண்டும் இக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. இப் பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணம் வேறு எந்தவொரு பரீட்சைக்காக மாற்றுவதற்கும் அனுமதி வழங்கப்படாது.

06. வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்னும் முன் அனுமானத்தின் படி விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரியவாறு பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு, விண்ணப்பங்களை பூர்த்தி செய்து, அதற்கு உரித்தான பற்றுச்சீட்டுடன் உரிய திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அனுப்பி வைத்துள்ள அலுவலர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டையுடன் நேரசூசியின் பிரதியையும் அனுப்பி வைப்பார். பரீட்சைக்குத் தோற்றுகின்ற விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தில் ஏற்கனவே அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளில் தங்களுடைய கையொப்பங்களை இட்டு அதனை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டவுடன் அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பத்திரிகை அறிவிப்பொன்றை வெளியிடும். அவ் அறிவிப்பு பிரசுரிக்கப்பட்டு 2/3 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அவ் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளதன் படி விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பனவற்றைக் குறிப்பிடல் வேண்டும். கொழும்புக்கு வெளியே வதியும் விண்ணப்பதாரராயின் அவ் விபரங்களுடன் தொலை நகல் ஊடாக அனுமதி அட்டையின் பிரதியொன்றை அனுப்புவதற்கு ஏதுவாக விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்துடன் கூடிய கோரிக்கைக் கடிதத்தை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தொலைநகல் இலக்கத்துக்கு அனுப்பி விசாரித்தல் பயனுள்ளதாகும். மேலும் உறுதிப்படுத்தலுக்காக பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் போது விண்ணப்பதாரியின் வசமுள்ள விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதி, பணம் செலுத்தப்பட்டிருப்பின் பற்றுச் சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவம் அனுப்பிய கடிதத்தைப் பதிவு செய்த பற்றுச்சீட்டினையும் தயாராக வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.

விண்ணப்பதாரி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்குவது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளதாக கருதப்படமாட்டாது.

07. விண்ணப்பப்படிவத்தில் மற்றும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் ஒப்பத்தினை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அலுவலரினால் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

08. பரீட்சைக்காகத் தோற்றும் முதல் திகதியன்றே பரீட்சை மேற்பார்வையாளரிடம் தனது ஒப்பத்தினை சான்றுப்படுத்திய அனுமதிப் பத்திரத்தினை ஒப்படைத்தல் வேண்டும்.

09. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அனுமதி அட்டையை பெற்றுள்ள அலுவலர்களுக்கு, பரீட்சைக்குத் தோற்றுமுகமாக திணைக்களத் தலைவர்களால் கடமை விடுமுறை வழங்கப்பட வேண்டும். பிரயாணச் செலவுகளெதுவும் வழங்கப்படமாட்டாது.

10. இப் பரீட்சை சிங்களம். தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகள் மூலம் நடாத்தப்படுதுடன் விண்ணப்பதாரிகள் தொடர்புடைய சேவைக்கு சேர்வதற்காக தோற்றிய மொழியில் அல்லது அரசகரும மொழியில் அல்லது இரு வினாத் தாள்களுக்கும் விடையளிக்க வேண்டும். போட்டிப் பரீட்சையின்றி இச்சேவையிற் சேர்ந்த அலுவலர்கள் தாம் கல்வி கற்ற மொழியில் அல்லது அரசகரும மொழியில் இரு வினாத்தாள்களுக்கும் விடையளித்தல் வேண்டும். விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சை மொழி மூலத்தினை அதன் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

11. அலுவலர்கள் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகவும் வேறுபட்ட தடவைகளிலும் தோற்ற முடியும். எவ்வாறாயினும், சித்தியடைவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கான மொத்த புள்ளிகளில் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

12. பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இணைந்த சேவைகள் பணிப்பளர் நாயகத்திற்கு வழங்கப்படுவதுடன் விண்ணப்பதாரிகளின் பெறுபேறுகள் பொது நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

13. **பரீட்சை நடைமுறை**. - இப் பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாகும்.

1. பாட இலக்கம் (01) – பொது நிர்வாகமும் நிதி முறைமைகளும் (100 புள்ளிகள்)

- பகுதி I - பொது நிர்வாகம் - நேரம் 1 ½ மணித்தியாலங்கள் - (50 புள்ளிகள்)

  (அ) தாபன விதிக்கோவையின் VI, இலிருந்து, VIII, XII, XIV, XXIV, XXVII, XXVIII வரையிலான அத்தியாயங்கள் உள்ளடங்கும்.

  (ஆ) 2009, பெப்புருவரி 20 ஆந் திகதிய இல. 1589/ 30 ஐக் கொண்ட அதிவிசேட வர்த்தமானியின் மூலம் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அலுவலக நடைமுறை விதிமுறைகள்.

  (இ) 1974 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை நூலக சங்கம் (கூட்டிணைப்பு) சட்டம் மற்றும் 2004 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க திருத்தச் சட்டம்.

- பகுதி II - நிதி முறைமைகள் - நேரம் 1 ½ மணித்தியாலங்கள் - (50 புள்ளிகள்)

  (இ) நிதிப் பிரமாணம் (X அத்தியாயம் தவிர) நூலகங்களின் மூலம் நிறைவேற்றப்படும் கணக்கு நடவடிக்கைகள் மற்றும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட ஒழுங்குவிதிகள்.

2. பாட இலக்கம் (02) – நூலக அமைப்பு – நேரம் 03 மணித்தியாலங்கள் - (100 புள்ளிகள்)

(அ) மாகாண நூலகப் பட்டயம்
(ஆ) நூலகக் குழுக்கள்
(இ) நூலகப் பொருட்களின் காப்பீடு
(ஈ) வாசகர் கல்வி மற்றும் மக்கள் தொடர்பாடல்
(உ) நூலக வகைகளும், சேவைகளும்
(ஊ) நூலக முகாமைத்துவத்தில் கவனத்திற் கொள்ளக் கூடிய கோட்பாடுகளும் மூலோபாயங்களும்
(எ) நூலகங்களில் செயற்படுத்தக்கூடிய விஸ்தரிப்புச் சேவைகள்

**கவனிக்க வேண்டியது**.- இப் பரீட்சையிற் சித்தியெய்துவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் குறைந்த பட்சம் 40% ஆன புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும்.

14. இப் பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்பட்டிராத ஏதேனும் விடயம் தொடர்பாக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதியானதாயிருக்கும்.

15. இவ் அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் அல்லது முரண்பாடுகள் காணப்படின் சிங்கள அறிவித்தலே வலுவுள்ளதாகும்.

கே. வீ. பி. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிருவாகம், அனர்த்த முகாமைத்துவ மற்றும்
கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சு.

பொது நிருவாகம், அனர்த்த முகாமைத்துவ மற்றும்
கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2019, யூலை 19.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**இலங்கை நூலகர் சேவை தரம் III இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை 2017 (II) - 2019**

EFFICIENCY BAR EXAMINATION FOR OFFICERS IN GRADE III OF THE SRI LANKA LIBRARIANS' SERVICE – 2017 (II) 2019

நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்:

உமக்கு உரித்தான சேவை (இதை பூரணப்படுத்த முன் வர்த்தமானி அறிவித்தலின் முதலாம் பந்தியின் குறிப்பைப் பார்க்கவும்.)

சிங்களம் - 02
தமிழ் - 03
ஆங்கிலம் - 04
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

1.0 1.1 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :...........................................................................

..........................................................................................................................................

(உதாரணம்: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதியில் வரும் பெயரை முதலிலிட்டு முதலெழுத்துக்களுடன் கூடிய பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :.............
..........................................................................................................................

..........................................................................................................................................
(உதாரணம்: GUNAWARDHANA, H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில் /தமிழில்) : .........................................................................................

..........................................................................................................................................

2.0 சேவை நிலையமும் முகவரியும்:........................................................................................................

2.1 அலுவலகத்தின் /திணைக்களத்தின் /நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்): ..
..........................................................................................................................................................

..........................................................................................................................................................

2.2 அலுவலகத்தின் /திணைக்களத்தின் /நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (சிங்களம் /தமிழ்): .........................

..........................................................................................................................................................

2.3 பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்):

..........................................................................................................................................

..........................................................................................................................................

3.0 3.1 பால் :

பெண் - 1
ஆண் - 0
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

3.2 தேசிய ஆள் அடையாள அட்டை இல.:

4.0 தொலைபேசி இலக்கம் : கையடக்க | | | | | | | | | | |

அலுவலக | | | | | | | | | | |

5.0 நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் பாடங்களும் பாட இலக்கமும்:

| பாடம் | பாட இலக்கம் |
|---|---|
| | |
| | |

6.0 பிறந்த திகதி : ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |

7.0 தற்போது வகிக்கும் பதவி :-

7.1 பதவி : ..............................................................................................................

7.2 நியமனக் கடிதத்தின் இல. : ........................................................................

8.0 8.1 நீர் முதற் தடவையாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கிறீர்களா?: ..................................

8.2 இல்லாவிடின் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம்: ..............................................

8.3 தபாலகம் /உப தபாலகம் அல்லது மாவட்ட /பிரதேச செயலகம் : ....................................................................................

8.4 பற்றுச்சீட்டு இலக்கம் : ..............................................................................................

8.5 திகதி: ........................................................................................

> பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டைக் கழறாதவாறு ஒட்டிவிடவும்.
> (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்).

9.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை:

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும், மேலே காட்டப்பட்டுள்ள அதே மொழியில் அப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவனென்றும், ஒழுக்காற்றுத் தண்டனைக்கு ஆளாகவில்லை என்றும் நான் வெளிப் படுத்துகின்றேன். மேலும் பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு நான் கட்டுப்படுவதாகவும் இத்தால் உடன்படுகின்றேன்.

.........................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : .......................................

10.0 திணைக்களத் தலைவரின் சான்றுரை :

(i) இப் பரீட்சார்த்தி இத் திணைக்களத்தின் சேவையிலுள்ள நூலகர் சேவை தரம் III ஐச் சேர்ந்த ஓர் அலுவலரென்றும்,
(ii) மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை எனவும்,
(iii) இவருடைய வேலையும் நடத்தையும் எப்பொழுதும் திருப்தியானது எனவும், கடந்த ஐந்து வருட காலத்தில் (எச்சரிக்கைகள் தவிர) இவர் எவ்வகையான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகவில்லை என்றும்.
(iv) இவர் இப்பரீட்சையில் தோற்றுவதற்குரிய தகைமையுடையவர் என்றும்,
(v) உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தியுள்ளார் என்றும் இப் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்றும் (தேவையற்ற சொற்களை வெட்டிவிடவும்)

நான் சான்றுப்படுத்துகிறேன்.

.........................................
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பதவிப் பெயர் : ...................................

முகவரி : ...................................

திகதி : ..................................

## பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சு

## இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் II ஆம் தரத்தைச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை - 2017 (II) - 2019

*2024/ 35 ஆம் இலக்க 2017.06.21 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டவாறான இலங்கை அரசாங்க நூலகர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 04 ஆம் பின் இணைப்பின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப இலங்கை அரசாங்க நூலகர் சேவை தரம் II இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை - 2019 நவெம்பர் மாதம் கொழும்பில் நடாத்தப்படும். இவ் அறிவித்தலின் படி குறித்த வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சைக்காக அரசாங்க சேவையின் இணைந்த சேவைக்குரிய அலுவலர்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.*

***குறிப்பு.*** *- இவ் வர்த்தமானி அறிவித்தலுக்கு ஒத்திசைவாக மாகாண அரசாங்க சேவையின் நூலகர் சேவை விண்ணப்பதாரிகளுக்கான ஏற்பாடுகள் உரிய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினாலும் ஏனைய நிறுவனங்களின் விண்ணப்பதாரிகளுக்கான ஏற்பாடுகள் அவ்வந்த நிறுவனங்களினாலும் வெளியிடப்படும்.*

*"ஒவ்வொரு மாகாண அரசாங்க சேவை மற்றும் ஏனைய நிறுவனங்களிலுள்ள அலுவலர்களின் விண்ணப்பங்களை வசதியாக இனங்காண்பதற்கென விண்ணப்பங்களின் தலைப்பில் உரித்தான சேவைகள் அல்லது நிறுவனத்தினைக் குறிப்பிடும் போது குறியீட்டு இலக்கங்கள் பாவிக்கப்படல் வேண்டும். அதற்கிணங்க* ***"இணைந்த சேவையின் அலுவலர்களுக்கான குறியீட்டு இலக்கம் 10" ஆகும்.*** *அவ் இலக்கத்தினை விண்ணப்பத்தின் வலப்பக்க மேல் மூலையில் தாங்களுக்குரிய சேவை என்னும் இடத்தில் குறிப்பிடல் வேண்டும்.*

*02. (i) இப் பரீட்சையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுமென்பதுடன், பரீட்சை நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பாக அவரால் விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டொழுகுதல் வேண்டும்.*

*(ii) பரீட்சார்த்திகளுக்கென விதிக்கப்பட்டுள்ள விதிகள் வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் பிரத்தியேகமாக அச்சிடப்படப்பட்டுள்ளன. இவ் விதிகளை மீறுவோர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாவார்.*

*03. இப் பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பப்படிவம் இவ் அறிவித்தலின் இறுதியில் வெளியிடப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பத்தை மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய சரியாகவும், தெளிவாகவும் தயாரித்து தமது திணைக்களத் தலைவர் ஊடாக பதிவுத் தபாலில் 2019, செத்தெம்பர் மாதம் 02 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவகையில் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு (நிறுவனம் சார் மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள்) கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" எனும் முகவரியைச் சென்றடையும் வண்ணம் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்ளை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பும் போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் மற்றும் தரம் என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*04.* ***விண்ணப்பதாரியின் ஆளடையாளம்.*** *- விண்ணப்பதாரிகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் தமது அடையாளத்தைப் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் நிரூபித்தல் வேண்டும். இந் நோக்கத்திற்காக, கீழேயுள்ள ஆவணங்களுள் எவையேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்:*

(i) *தேசிய ஆள் அடையாள அட்டை ;*
(ii) *செல்லுபடியாகும் கடவுச் சீட்டு;*
(iii) *செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்*

*மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுள் ஏதாவது ஒன்றையேனும் சமர்பிக்க முடியாத விண்ணப்பதாரியினது பரீட்சார்த்த உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் பெயரில் இரத்துச் செய்யப்படலாம்.*

*05.* ***விண்ணப்பங்கள் தயாரிக்கப்படவேண்டிய முறை.*** *- விண்ணப்பங்கள் "ஏ4" அளவிலான ஒரு தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து இல. 1.0 தொடக்கம் 5.0 வரை முதல் பக்கத்திலும் இல. 6.0 தொடக்கம் 9.0 வரை இரண்டாம் பக்கத்திலும் அமையும் வண்ணம் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பம் தட்டச்சில் பொறிக்கப்பட்டு அனுப்பப்படலாம். ஆனால் அது சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப அமையாத விண்ணப்பங்களும், பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியொன்றை தம்வசம் வைத்திருத்தல் பயனுள்ளதாகும். பரீட்சை விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில்*

தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும். முழுமைப்படுத்திய விண்ணப்பம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்ததாக மற்றும் சகல தகவல்களையும் உள்ளடக்கி சரியாக நிரப்பப்பட்டுள்ளதா எனவும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதன் விபரங்களை விண்ணப்பத்தில் உள்ளடக்கி பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா என்பது பற்றியும் விண்ணப்பதாரியினால் பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும். விண்ணப்பப்படிவம் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் தரம் II உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை 2017 (II) - 2019 ” எனக் குறிப்பிடவும்.

**போலியான தகவல்களுக்கான தண்டனை**. – விண்ணப்பத்தினை பூரணப்படுத்தும் போது மிகக் கவனமாக சரியான தகவல்களை நிரப்புதல் வேண்டும். பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பரீட்சார்த்தத் தன்மையினை இரத்துச்செய்ய முடியும்.

முதல் முறை இப் பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. எனினும் அடுத்து வரும் தடவைகளில் தோற்றும் அலுவலர்கள் சகல பாடங்களுக்கும் தோற்றுவதாயின் ரூபா 500 உம் தனியாக ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் ரூபா 250 உம் பரீட்சைக் கட்டணமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு வரவு வைத்து நாட்டின் எந்தவொரு தபாலகம் / உப தபாலகம் அல்லது மாவட்ட/ பிரதேச செயலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றினை தம்வசம் வைத்திருத்தல் பிரயோசனமாகும். இப் பரீட்சைக் கட்டணத்திற்கு மேலதிகமாக எதுவித அறவிடலும் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன். எக் காரணம் கொண்டும் இக் கட்டணங்கள் மீளளிக்கப்பட மாட்டாது. இப் பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணம் வேறு எந்தவொரு பரீட்சைக்காக மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

06. வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்னும் முன் அனுமானத்தின் படி விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரியவாறு பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு, விண்ணப்பங்களை பூர்த்தி செய்து, அதற்கு உரித்தான பற்றுச்சீட்டுடன் உரிய திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அனுப்பி வைத்துள்ள அலுவலர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டையுடன் நேரசூசியின் பிரதியையும் அனுப்பி வைப்பார். பரீட்சைக்குத் தோற்றுகின்ற விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தில் ஏற்கனவே அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளில் தங்களுடைய கையொப்பங்களை இட்டு அதனை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

விண்ணப்பதாரிகளிடம் அனுமதி அட்டைகள் வழங்கியவுடன் அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பத்திரிகை அறிவிப்பொன்றை வெளியிடும். அவ் அறிவிப்பு பிரசுரிக்கப்பட்டு 2/3 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அவ் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளதன் படி விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பனவற்றை குறிப்பிடல் வேண்டும். கொழும்புக்கு வெளியே வதியும் விண்ணப்பதாரராயின் அவ் விபரங்களுடன் தொலை நகல் ஊடாக அனுமதி அட்டையின் பிரதியொன்றை அனுப்புவதற்கு ஏதுவாக விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்துடன் கூடிய கோரிக்கைக் கடிதத்தை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தொலைநகல் இலக்கத்துக்கு அனுப்பி விசாரித்தல் பயனுள்ளதாகும். மேலும் உறுதிப்படுத்தலுக்காக பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் போது விண்ணப்பதாரியின் வசமுள்ள விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதி, பணம் செலுத்தப்பட்டிருப்பின் பற்றுச் சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவம் அனுப்பிய கடிதத்தைப் பதிவு செய்த பற்றுச்சீட்டினையும் தயாராக வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.

விண்ணப்பதாரி ஒருவருக்கு அனுமதி அட்டைகள் வழங்குவது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளதாக கருதப்படமாட்டாது.

07. விண்ணப்பப்படிவத்தில் மற்றும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் ஒப்பத்தினை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அலுவலரினால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

08. பரீட்சைக்காக தோற்றும் முதல் திகதியன்றே பரீட்சை மேற்பார்வையாளரிடம் தனது ஒப்பத்தினை சான்றுப்படுத்திய அனுமதிப் பத்திரத்தினை ஒப்படைத்தல் வேண்டும்.

09. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அனுமதி அட்டையை பெற்றுள்ள அலுவலர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுமுகமாக திணைக்களத் தலைவர்களால் கடமை விடுமுறை வழங்கப்பட வேண்டும். பிரயாணச் செலவுகளெதுவும் வழங்கப்படமாட்டாது.

10. இப் பரீட்சை சிங்களம். தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகள் மூலம் நடாத்தப்படுவதுடன் விண்ணப்பதாரிகள் தொடர்புடைய சேவைக்கு சேர்வதற்காக தோற்றிய மொழியில் அல்லது அரசகரும மொழியில் இரு வினாத்தாள்களுக்கும் விடையளிக்க வேண்டும். போட்டிப் பரீட்சையின்றி இச்சேவையிற் சேர்ந்த அலுவலர்கள் தாம் கல்வி கற்ற மொழியில் அல்லது அரசகரும மொழியில் இரு வினாத்தாள்களுக்கும் விடையளித்தல் வேண்டும். விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சை மொழி மூலத்தினை அதன் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

11. அலுவலர்கள் ஒவ்வொரு பாடத்திற்கு தனித்தனியாகவும் வேறுபட்ட தடவைகளிலும் தோற்ற முடியும். எவ்வாறாயினும், சித்தியடைவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கான மொத்த புள்ளிகளில் ஆகக் குறைந்தது 40 வீதம் என்ற வகையில் புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

12. பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்படுவதுடன் விண்ணப்பதாரிகளின் பெறுபேறுகள் பொது நிர்வாக அனர்த்த முகாமைத்துவ மற்றும் கிராமியப் பொருளாதார அமைச்சின் இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

13. **பரீட்சை நடைமுறை**- இப் பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாகும்

1. பாட இலக்கம் (01) – பொது நிர்வாகம் மற்றும் நிதி முறைமைகள் (100 புள்ளிகள்)

● பகுதி I - பொது நிர்வாகம் - நேரம் 1 ½ மணித்தியாலங்கள் - (50 புள்ளிகள்)

(அ) இலங்கை அரசியல் யாப்புத் தொடர்பான அடிப்படை அறிவு.

(ஆ) தாபன விதிக்கோவையின் VI, இலிருந்து, VIII, XII, XIV, XXIV, XXVII, XXVIII வரையிலான அத்தியாயங்கள் உள்ளடங்கும்.

(இ) 1973 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க அரச சுவடிக் காப்புச் சட்டம் மற்றும் 1981 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சுவடிக்காப்பு (திருத்தச்) சட்டம்.

(ஈ) 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கம் கொண்ட விஞ்ஞான தகவல் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் III ஆம் பகுதி.

(உ) 1998 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்கம் கொண்ட தேசிய நூலக மற்றும் ஆவணவாக்கல் சேவைகள் சபைச் சட்டம்.

(ஊ) 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்கம் கொண்ட புலமைச் சொத்துச் சட்டம்.

● பகுதி II - நிதி முறைமைகள் - நேரம் 1 ½ மணித்தியாலங்கள் - (50 புள்ளிகள்)

(எ) நிதிப் பிரமாணம்

நூலகங்களின் மூலம் நிறைவேற்றப்படும் கணக்கு நடவடிக்கைகள் மற்றும் அது சார்ந்த ஒழுங்குவிதிகள்.

2. பாட இலக்கம் (02) – நூலக அமைப்பு – நேரம் 03 மணித்தியாலங்கள் - (100 புள்ளிகள்)

(அ) நூலக கட்டிடங்களும் உபகரணங்களும்

(ஆ) அரசாங்க வெளியீடுகளின் பயனும் பயன்படுத்தும் விதமும்

(இ) நூலகத் துறையிலுள்ள வலய மற்றும் சர்வதேச அமைப்புக்கள்

(ஈ) நூலக முகாமைத்துவ மூலோபாயங்கள்

(உ) நிதி முகாமைத்துவம்

(ஊ) கால முகாமைத்துவம்

(எ) மனித வள முகாமைத்துவம்

(ஏ) இலங்கைத் தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் பணிகள்

(ஐ) நூலக கணினி மயப்படுத்தல் முறைமைகளும் வலையமைப்புக்களும்.

**கவனிக்க வேண்டியது**.- இப் பரீட்சையிற் சித்தியெய்துவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் குறைந்த பட்சம் 40% ஆன புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும்.

14. இப் பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்பட்டிராத ஏதேனும் விடயம் தொடர்பாக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதியானதாயிருக்கும்.

15. இவ் அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் அல்லது முரண்பாடுகள் காணப்படின் சிங்கள அறிவித்தலே வழுவுள்ளதாகும்.

கே. வீ. பி. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிருவாகம், அனர்த்த முகாமைத்துவ மற்றும்
கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சு.

பொது நிருவாகம், அனர்த்த முகாமைத்துவ மற்றும்
கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சு,
கொழும்பு 07,
2019, யூலை 19.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**இலங்கை நூலகர் சேவை தரம் II இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை 2017 (II) - 2019**

EFFICIENCY BAR EXAMINATION FOR OFFICERS IN GRADE II
OF THE SRI LANKA GOVERNMENT LIBRARIANS' SERVICE 2017 (II) - 2019

நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்:

சிங்களம் - 02
தமிழ் - 03
ஆங்கிலம் - 04
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

உமக்கு உரித்தான சேவை (இதை பூரணப்படுத்த முன் வர்த்தமானி அறிவித்தலின் முதலாம் பந்தியின் குறிப்பைப் பார்க்கவும்)

---

1.0 1.1 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்) :..........................................................................

.......................................................................................................................................

(உதாரணம்: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதியில் வரும் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களை பின்னர் வருமாறு பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :..................................................................................................................................

.......................................................................................................................................

(உதாரணம்: GUNAWARDHANA, H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில் /தமிழில்) : ..................................................................................

.......................................................................................................................................

2.0 சேவை நிலையமும் முகவரியும்:..........................................................................................................

2.1 அலுவலகத்தின் /திணைக்களத்தின் /நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்): ..........

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

2.2 அலுவலகத்தின் /திணைக்களத்தின் /நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (சிங்களத்தில் /தமிழில்): ........................

..........................................................................................................................................................

2.3 பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்):

..........................................................................................................................................

..........................................................................................................................................

3.0 3.1 பால் :

பெண் - 1

ஆண் - 0

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

3.2 தேசிய ஆள் அடையாள அட்டை இல.:

3.3 தொலைபேசி இலக்கம் : கையடக்க

அலுவலக

4.0 நீங்கள் பரீட்சைக்கு தோற்றும் பாடங்களும் பாட இலக்கமும்:

| பாடம் | பாட இலக்கம் |
|---|---|
| | |
| | |

5.0 பிறந்த திகதி : ஆண்டு மாதம் திகதி

6.0 தற்போது வகிக்கும் பதவி :-

6.1 பதவி : ................................................................................................

6.2 நியமனக் கடிதத்தின் இல. : ..................................................................

7.0 7.1 நீர் முதற் தடவையாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கிறீர்களா?: ................................

7.2 இல்லாவிடின் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம்: ..............................................

7.3 தபாலகம் /உப தபாலகம் அல்லது மாவட்ட /பிரதேச செயலகம் : .....................................................................

7.4 பற்றுச்சீட்டு இலக்கம் : ..................................................................................

7.5 திகதி: ..........................................................................

பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டைக் கழறாதவாறு ஒட்டிவிடவும்.
(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்)

8.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை:

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும், மேலே காட்டப்பட்டுள்ள அதே மொழியில் அப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவரென்றும், ஒழுக்காற்றுத் தண்டனைக்கு ஆளாகவில்லை என்றும் நான் வெளிப்

படுத்துகின்றேன். மேலும் பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு நான் கட்டுப்படுவதாகவும் இத்தால் உடன்படுகின்றேன்.

..........................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : .......................................

9.0 திணைக்களத் தலைவரின் சான்றுரை :

(i) இப் பரீட்சார்த்தி இத் திணைக்களத்தின் சேவையிலுள்ள நூலகர் சேவை தரம் II ஐச் சேர்ந்த ஓர் அலுவலரென்றும்,

(ii) மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை எனவும்;

(iii) இவருடைய வேலையும் நடத்தையும் எப்பொழுதும் திருப்தியானது எனவும், கடந்த ஐந்து வருட காலத்தில் (எச்சரிக்கைகள் தவிர) இவர் எவ்வகையான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகவில்லை என்றும்;

(iv) இவர் இப்பரீட்சையில் தோற்றுவதற்குரிய தகைமையுடையவர் என்றும்;

(v) உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தியுள்ளார் என்றும் இப் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்றும்,

நான் சான்றுப்படுத்துகிறேன்.

.....................................
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பதவிப் பெயர் : .....................................

முகவரி : ..................................

திகதி : ...................................

08-149

---

அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

## இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட/திறந்த போட்டிப் பரீட்சை - 2017/2018

இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலில் "சேவை" என்பது, இலங்கைக் கணக்காளர் சேவையை (இ.க.சே) குறிக்கும்.

1. **பரீட்சைத் திகதி**.- பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2019, நவெம்பர் மாதத்தில் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் பரீட்சை நடாத்தப்படும். இப்பரீட்சையை பிற்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

2. இந்தப் பரீட்சையின் மூலம் நிரப்புவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற வெற்றிடங்களின் அளவு பின்வருமாறு:

| | |
|---|---|
| திறந்த | - 86 |
| மட்டுப்படுத்தப்பட்ட | - 60 |

3. **ஆட்சேர்ப்பு முறை**.- நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்படுவதானது, எழுத்து மூலப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் 40% புள்ளிகளுக்குக் குறையாமல் பெற்று மொத்தப் புள்ளிகளின் திறமையின் ஒழுங்கின் பிரகாரம் பரீட்சித்தல் பரீட்சையொன்றுக்கு அழைத்து நியமனத்திற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைக் குழுவொன்றினால் தகைமைகள் இருக்கின்றனவா என்பதைப் பரீட்சித்த பின்னரேயாகும்.

3.1 இந்தப் பதவிக்காக நியமிக்கப்படுகின்ற எண்ணிக்கை மற்றும் நியமனம் செயல்வலுப் பெறுகின்ற திகதி என்பன அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம் தீர்மானிக்கப்படும். ஏதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உண்டு.

4. **தகைமைகள்**

4.1 **திறந்த போட்டிப் பரீட்சை**

(அ) **கல்வித் தகைமைகள் :**

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலே வர்த்தகம், முகாமைத்துவம், கணக்கியல், பொருளியல் ஆகிய துறைகளைச் சேர்ந்த பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்;

அல்லது

(ii) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின்/ இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் கணக்கியல் அல்லது வர்த்தகம் பற்றிய உயர் டிப்ளோமாதாரர் ஒருவராகவிருத்தல்;

அல்லது

(iii) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தில் அல்லது வேறொரு பொதுநலவாய நாட்டில் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தில் தகுதிச்சான்றுடைய II அல்லது இடைநிலைப் பரீட்சை அல்லது கணக்கியல் மற்றும் வணிகச் சான்றிதழ் II அல்லது வணிக கட்டத் தேர்வு அல்லது அதிலும் கூடிய உயர்நிலைப் பரீட்சை ஒன்றிலே சித்தியடைந்திருத்தல்;

அல்லது

(iv) ஐக்கிய இராச்சியத்தின் அல்லது வேறு யாதேனுமொரு பொதுநலவாய நாட்டைச் சேர்ந்த பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனம் ஒன்றில் நடாத்தப்படும் செலவினம் மற்றும் முகாமைத்துவப் பரீட்சையின் I மற்றும் II ஆம் பகுதிகள் அல்லது இடைநிலைப் பரீட்சை அல்லது அதிலும் கூடிய உயர்நிலைப் பரீட்சை ஒன்றிலே சித்தியடைந்திருத்தல்;

அல்லது

(v) ஐக்கிய இராச்சியத்தின் அல்லது வேறு யாதேனுமொரு பொதுநலவாய நாட்டின் சான்றிதழ் பெற்ற கணக்காளர்களின் நிறுவகத்தில் I ஆவது தொழில்சார் மட்டத்தில் அல்லது அதிலும் கூடிய உயர் மட்டத்திலான பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்;

அல்லது

(vi) ஐக்கிய இராச்சியத்தின் அல்லது வேறு யாதேனுமொரு பொதுநலவாய நாட்டின் சான்றிதழ் பெற்ற கணக்காளர்களின் பட்டயச் சங்கத்தின் I ஆவது II ஆவது பகுதிக்குரிய பரீட்சை அல்லது அதிலும் கூடிய பரீட்சை ஒன்றிலே சித்தியடைந்திருத்தல வேண்டும்;

அல்லது

(vii) ஐக்கிய இராச்சியத்தின் செயலாளர்களின் மற்றும் நிருவாகிகளின் பட்டய நிறுவனத்தின் இறுதிப் பரீட்சை.

(ஆ) **உடல்சார் தகைமைகள் :** சகல விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கு அனைத்து வழிகளிலும் உடல்சார் தகைமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) **ஏனைய தகைமைகள் :**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ii) விண்ணப்பதாரர்கள் சிறந்த நடத்தை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.
(iii) இலங்கை கணக்காளர் சேவையின் ஆட்சேர்ப்புக்காக நடைபெற்ற திறந்த போட்டிப் பரீட்சையில் (வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்காக நடாத்தப்பட்ட விசேட திறந்த போட்டிப் பரீட்சை அடங்கலாக) இரண்டு தடவைகளுக்கு மேல் எந்தவொரு நபரும் தோற்றுவதற்கு அனுமதி கிடையாது.
(iv) யாதேனுமொரு சமயத் தலைவராக செயற்படும் எவரும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெற மாட்டார்.

(v) சேவைக்கு நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளதாக கருதுவதற்கு விண்ணப்பதாரர், 4.1(அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை 2019, ஓகத்து மாதம் 02 ஆந் திகதியன்று சகல வழிகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(ஈ) **வயது**.- 2019, ஓகத்து மாதம் 02 ஆந் திகதியன்று 22 வயதிற்குக் குறையாதவராகவும், 30 வயதுக்கு மேற்படாத வராகவும் இருத்தல் வேண்டும். (இச் சந்தர்ப்பத்துக்கு மாத்திரம் வரையறுக்கப்படும் வகையில் அதிகபட்ச வயது 30 ஆகக் கருதப்படும்).

4.2 **மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை** :

(அ) **அனுபவத்திற்கான தகைமைகள்** :

(i) மேற்படி 4.1 (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள யாதேனுமொரு தகைமையுடன் 2019.08.02 ஆந் திகதியன்று அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் (05) ஐந்து வருடங்களுக்குக் குறையாத திருப்திகரமான, தொடர்ச்சியான, நிரந்தர சேவைக் காலம் ஒன்றுடன் குறித்த தினத்தன்று ஆகக் குறைந்தது 05 சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(ii) அரசாங்க அல்லது மாகாண சேவையில் நிரந்தர ஓய்வூதிய உரித்துடைய MN1-2006 (ஏ) இனைக் கொண்ட சம்பள அளவுத் திட்டத்தில் அல்லது அதிலும் கூடிய சம்பள அளவுத் திட்டத்திற்குரிய பதவி ஒன்றில் 10 வருடங்களிற்குக் குறையாத திருப்திகரமான சேவைக் காலம் ஒன்றினைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் 10 சம்பள ஏற்றங்களை ஆகக்குறைந்தது பெற்றிருத்தல்.

(ஆ) **உடல் தகைமைகள்**: சகல விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கு தேவையான உடல் நிலையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) **ஏனைய தகைமைகள்**:

(i) விண்ணப்பதாரர்கள் சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
(ii) விண்ணப்பிப்பதற்கான தகைமை பெறுவதற்கு முந்திய ஐந்து வருட காலப் பகுதியினுள் உரிய தினத்தில் அனைத்து சம்பள ஏற்றங்களையும் பெற்றிருத்தல் வேண்டும்.
(iii) 2019, ஓகத்து மாதம் 02 ஆந் திகதியன்று முந்திய ஐந்து வருட காலத்தினுள் திருப்திகரமான சேவைக் காலம் ஒன்றினைக் கொண்டிருத்தல்.
(iv) இலங்கை கணக்காளர் சேவையின் ஆட்சேர்ப்புக்காக நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் (வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்காக நடாத்தப்பட்ட விசேட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை அடங்கலாக) இரண்டு தடவைகளுக்கு மேல் எந்தவொரு நபரும் தோற்றுவதற்கு அனுமதி கிடையாது.
(v) யாதேனுமொரு சமயத் தலைவராக செயற்படும் எவரும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெற மாட்டார்.
(vi) சேவைக்கு நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள வராகக் கவனத்திற் கொள்வதற்கு குறித்த விண்ணப்பதாரர், 4.2(அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை 2019.08.02 ஆந் திகதியன்று அனைத்து வழிகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

5. **சேவை நிபந்தனைகள்**.- இந்த நியமனம் அரசாங்க சேவையின் நியமனங்களை நிருவகிக்கின்ற பொது நிபந்தனை களுக்கும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலொழுங்கு விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவைக்கும், அரசாங்கத்தின் நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களங்களுக்குரிய ஏனைய கட்டளைகளுக்கும் உட்பட்டதாகும். இலக்கம் 1670/33 மற்றும் 2010, செத்தெம்பர் 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட இலங்கை கணக்காளர் சேவையின் பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், அந்தப் பிரமாணக் குறிப்புக்கு செய்யப்பட்டுள்ள அல்லது இதன் பின்னர் செய்யப்படும் திருத்தங்களுக்கும் உட்பட்டு தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரியொருவர் இலங்கை கணக்காளர் சேவையின் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவார்.

(அ) திறந்த அடிப்படையில் நியமனம் பெறும் அலுவலர்களுக்கு இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையது மாகும். உமக்கு உரித்துடையதாகும் ஓய்வூதியச் சம்பளம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு நீர் கட்டுப்படுதல் வேண்டும். அத்துடன் நீர் விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு/ தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் விதத்தில் நீர் அதற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் நியமனம் பெறும் அலுவலர்களுக்கு இந்த நியமனம் நிரந்தரமானதாகும். உமக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் எதிர்காலத்தில் அரசாங்கத்தினால் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு நீர் கட்டுப்படுதல் வேண்டும்.

(ஆ) ஆட்சேர்ப்புச் செய்யப்படும் அலுவலர்கள் 3 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்படுவர். அத்துடன் இலங்கை கணக்காளர் சேவையின் அலுவலர்களுக்கான 1 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் நியமனத் திகதியிலிருந்து 03 வருடங்களுக்குள் சித்தியடைதல் வேண்டும்.

(இ) 2014.01.21 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 01/2014 இன் ஏற்பாடுகள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட சுற்றறிக்கைகளின் பிரகாரம் பதவியில் இணைந்து 05 வருடங்களுக்குள் உரிய அரச கரும மொழித் தேர்ச்சியினைப் பெற்றுக் கொண்டதாக நீர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

6. **கட்டமைப்பு மற்றும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம்**: SL1 - 2016 - ரூ. 47,615.00 – 10 × 1,335 – 8 ×1,630 – 17 × 2,170 - ரூ.110,895.00 (2016.02.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இன் ஏற்பாடுகளுக்கு ஏற்ப அதன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சம்பளம் வழங்கப்படும்.)

7. **பரீட்சைக் கட்டணம்**.- திறந்த போட்டிப் பரீட்சைக் கட்டணம் ரூ.1000.00 ஆகும். மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக் கட்டணம் ரூ.1000.00 ஆகும். விண்ணப்பதாரி ஒருவர் இரண்டு பரீட்சைகளுக்கும் விண்ணப்பிக்கும் பட்சத்தில் கட்டணமாக ரூ.1500.00 அறவிடப்படும். இக்கட்டணத்தை விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினத்திக்கு முன்னர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு வைப்புச் செய்வதற்காக இலங்கையில் அமைந்துள்ள எந்தவொரு தபாலகம் / உபதபாலகங்களில் செலுத்துதல் வேண்டும். தபாலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தின் உரிய பெட்டியில் ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றினை விண்ணப்பதாரர்கள் தம்மிடம் வைத்துக்கொள்ளல் பயன்மிக்கதாக அமையும். இப்பரீட்சைக் கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்பட மாட்டாது. மேலும் பரீட்சைக் கட்டணமாக முத்திரைகள் அல்லது காசுக் கட்டளை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

8. **விண்ணப்பிக்கும் முறை** :

(அ) விண்ணப்பப்படிவம் இந்த அறிவித்தலுடன் இணைத்துள்ள மாதிரிப் படிவத்திற்கு ஏற்ப தாளின் இரு பக்கங் களையும் பயன்படுத்தி ஏ4 அளவிலான கடதாசி ஒன்றில் தயாரித்து விண்ணப்பதாரரினாலேயே தெளிவாக நிரப்புதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பப்படிவத்தின் இலக்கம் 01 முதல் இலக்கம் 03 வரையான தலைப்புக்கள் முதற் பக்கத்தில் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே நிரப்புதல் வேண்டும். எவ்வாறாயினும், விண்ணப்பத்தினை தயாரிக்கும் போது அதன் தலைப்புக்களை சிங்கள மொழிமூல விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் மொழிமூல விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும். குறித்த மாதிரிப்படிவத்துக்கு ஒத்திசைவற்ற, திருத்தமாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். உரிய வகையில் பூரணப்படுத்தாத விண்ணப்பங்கள் தொடர்பான இழப்பீடுகளை விண்ணப்பதாரியே பொறுப்பேற்றல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதியினை தன்னிடம் வைத்திருப்பது பிரயோசனமளிப்பதோடு பூரணப்படுத்திய விண்ணப்பம் பரீட்சை அறிவித்தலுக்கு ஒத்திசைவாக உள்ளதா என விண்ணப்பதாரி பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும். அவ்வாறு காணப்படாது விடின் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்பட முடியும்.

(இ) திறந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்கள் பதிவுத் தபாலில் 2019, செத்தெம்பர் மாதம் 02 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் (நிறுவனம் சார் வெளிநாட்டுப் பரீட்சைகள்) பிரிவு, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், தபால் பெட்டி 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "திறந்த போட்டிப் பரீட்சை, கணக்காளர் 2017/2018" என்று தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். குறித்த தினத்திற்குப் பின்னர் கிடைக்கப் பெறும் எந்தவொரு விண்ணப்பப்படிவமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**குறிப்பு** : அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும், திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்படிவத்தினை திணைக்களத் தலைவர் / நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

(ஈ) மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்கள் திணைக்களத் தலைவர்களினூடாக பதிவுத் தபாலில் 2019, செத்தெம்பர் மாதம் 02 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு "பரீட்சைகள் ஆணையாளர், ஒழுங்கமைப்பு மற்றும் (நிறுவனம் சார் வெளிநாட்டுப் பரீட்சைகள்) பிரிவு, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், தபால்பெட்டி 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை, கணக்காளர் 2017/2018" என்று தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் எதுவித விண்ணப்பப்படிவமும் ஏற்றுக்கொள்ளப்பட் மாட்டாது.

மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் திறந்த போட்டிப் பரீட்சை ஆகிய இரண்டிற்கும் தோற்றும் பட்சத்தில் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மட்டுப்படுத்தப்பட்ட /திறந்த போட்டிப் பரீட்சை, கணக்காளர் 2017/2018" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

(உ) பரீட்சைக்கு விண்ணப்பிக்கின்ற சந்தர்ப்பத்தில் இருந்த விண்ணப்பதாரியின் பதவி மற்றும் சேவை நிலையம், பரீட்சை சம்பந்தமான சகல நடவடிக்கைகளுக்காகவும் உரித்தாகின்ற அதேவேளையில், விண்ணப்பங்களை அனுப்பிய பின்னர் அது சம்பந்தமாக இடம்பெறுகின்ற மாற்றங்கள் தொடர்பில் கவனஞ் செலுத்தப்பட மாட்டாது.

(ஊ) விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப் பத்திரங்கள் அனுப்பப்பட்டவுடனேயே அது பற்றிக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதிப் பத்திரங்கள் கிடைக்காவிட்டால் அதில் குறிப்பிடப்பட்டுள்ள விதமாக அதுபற்றி இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அதில் விண்ணப்பதாரியின் முழுப் பெயர், முகவரி, தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயர் என்பவற்றைக் குறிப்பிட வேண்டிய அதேவேளையில், அவ்வாறு விசாரணை செய்கின்ற சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரி தன்னிடம் வைத்துள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபாலிலிடும் போது பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டு என்பவற்றை தன்வசம் வைத்திருப்பது அத்தியவசியமானதாகும். கொழும்புக்கு வெளியிலிருக்கும் விண்ணப்பதாரியாயின் தொலைநகல் மூலம் அனுமதிப் பத்திரத்தின் பிரதியொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக உங்கள் தொலைநகல் இலக்கத்தையும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களையும் குறிப்பட்டு வேண்டுகோள் கடிதம் ஒன்றை தொலைநகல் மூலம் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி விசாரணை செய்வதும் பயனுடையதாக இருக்கும்.

9. **பரீட்சைக்குத் தோற்றுதல் :**

(அ) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்தவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்னும் முடிவின் அடிப்படையில் விண்ணப்பங்களை அனுப்பியுள்ள சகல விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிப் பத்திரம் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒருவர் உரிய முறையில் கையொப்பத்தை உறுதி செய்து தமது அனுமதிப் பத்திரத்தை பரீட்சை மண்டபத்திற்குப் பொறுப்பான அதிகாரியிடம் பெற்றுக்கொடுத்தல் வேண்டும். தமது அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பிக்காத பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதி பெற்றுக்கொடுக்கப்பட மாட்டாது.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் உரிய பரீட்சை மண்டபத்திற்குரிய அனுமதிப் பத்திரத்தை முதலில் அந்த மண்டபத்தில் தோற்றும் நாளன்று அதற்குப் பொறுப்பான அதிகாரியிடம் வழங்குதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பின்பற்ற வேண்டிய ஒழுங்கு விதிகள் தொடர்பாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

(இ) விண்ணப்பதாரர் ஒருவருக்கு அனுமதிப் பத்திரம் ஒன்றினை அனுப்பியுள்ளமை, அவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவர் என்று பொருள்கொள்ளக் கூடாது.

(ஈ) பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் உட்படுவர். அவ்வாறான சட்டதிட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனை ஒன்றிற்கு அவர் ஆளாக வேண்டி ஏற்படும்.

*10.* **விண்ணப்பதாரரின் ஆளடையாளம் :** தாம் தோற்றும் சகல பாடங்களுக்கும் பரீட்சை மண்டபத்திற்குப் பொறுப்பான தலைமை அதிகாரி திருப்தியடையும் வகையில் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களில் யாதேனும் ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) தேசிய ஆள் அடையாள அட்டை;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு;
(இ) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அவ்வாறேபரீட்சார்த்தியின் ஆளடையாளத்தைநிரூபிப்பதற்குமுடியுமானவகையில்முகம்மற்றும்காதுகள்இரண்டினையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்திற்கு பிரவேசித்தல் வேண்டும். மேலும் தங்களது ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்திற்கு பிரவேசிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். பரீட்சை மண்டபத்திற்கு நுழைந்தது முதல் பரீட்சை முடிவுற்று வெளியேறும் வரை பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு விண்ணப்பதாரிகளை அடையாளம் கண்டு கொள்ளும் வகையில் முகம் மற்றும் காதுகளிரண்டினையும் மறைக்காமலிருத்தல் வேண்டும். ஏதேனுமொரு காரணத்தினால் எதிர்ப்புக்கள் எழுந்தால் பரீட்சைக்கு தோற்றுவதற்கு வாய்ப்பு வழங்கப்படும். என்றாலும் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாத காரணத்தினால் அவ்வாறான பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் வெளியிடப்பட மாட்டாது.

*11.* **போலியான தகவல்களை வழங்குதல்:** விண்ணப்பதாரர் ஒருவர் தகைமை பெறாதவர் என்று கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் காலப் பகுதியில் அல்லது அதன் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தி நிலை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தி ஒருவர் வழங்கியுள்ள யாதேனுமொரு விடயம், அவர் போலியானதென தெரிந்து கொண்டே வழங்கியுள்ளமை கண்டுபிடிக்கப்படின், அல்லது யாதேனுமொரு முக்கிய விடயத்தை அவர் வேண்டுமென்றே மறைத்திருப்பின் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு இடமுண்டு.

*12.* இந்த ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

*13.* **பரீட்சை முறை மற்றும் பரீட்சை மொழிமூலம்:**

(அ) இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்;
(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் தகைமையுடைய பரீட்சையொன்றில் சித்தியடைந்த மொழியில் அல்லது அரச கரும மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும் ;
(இ) பரீட்சார்த்தி ஒருவர் தகைமையுடைய பரீட்சையின் பாடங்களை இரு மொழிகளில் அல்லது அதனை விட மேற்பட்ட அல்லது சித்தியடைந்திருப்பின், அப்பரீட்சையில் அவர் சித்தியடைந்த பாடங்களில் அதிகளவு தோற்றிய மொழியில் அல்லது அரச கரும மொழியொன்றில் அல்லது பரீட்சைக்கு தோற்றியிருத்தல் வேண்டும்;
(ஈ) பிரதான பாடம் ஒரு மொழியிலும், மேலதிக பாடம் இன்னொரு மொழியிலும், சித்தியடைந்துள்ள விசேட பட்டத்தையுடைய பரீட்சார்த்தி பிரதான பாடங்களில் சித்தியடைந்த மொழியில் அல்லது அரச கரும மொழியொன்றினில் அல்லது பரீட்சைக்கு தோற்றியிருத்தல் வேண்டும்.

**குறிப்பு:**

(i) மேற்குறிப்பிட்ட (ஆ) மற்றும் (இ) வின் “ தகைமையுடைய பரீட்சைகள்” என்பதனால் நாடப்படுவது *4.1* (அ) ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள பரீட்சைகளில் ஒன்றேயாகும்.
(ii) பரீட்சார்த்திகள் இப்பரீட்சையின் அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரு மொழியில் மாத்திரம் தோற்றுதல் வேண்டும்.
(iii) பரீட்சார்த்தி ஒருவருக்கு தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழியை மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

*14.* **பரீட்சித்தல் முறை :**

(அ) பின்வரும் பாடங்களை உள்ளடக்கிய எழுத்து மூலப் பரீட்சை ஒன்று: இவ்வினாத்தாள்கள் அனைத்தும் கட்டாய வினாக்களைக் கொண்டிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டியது கட்டாயமானதாகும்.

| | பாடங்கள் | காலம் | புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. | நிதி கணக்கியல் - வினாத்தாள் I | - காலம் 03 மணித்தியாலம் | - 100 புள்ளிகள் |
| 2. | நிதி கணக்கியல் - வினாத்தாள் II | - காலம் 03 மணித்தியாலம் | - 100 புள்ளிகள் |
| 3. | செலவினம் மற்றும் முகாமைத்துவக் கணக்கியல் | - காலம் 03 மணித்தியாலம் | - 100 புள்ளிகள் |
| 4. | கணக்காய்வு மற்றும் விசாரணை | - காலம் 03 மணித்தியாலம் | - 100 புள்ளிகள் |
| 5. | பொது விவேகம் மற்றும் கிரகித்தல் | - காலம் 03 மணித்தியாலம் | - 100 புள்ளிகள் |
| 6. | அரச நிதி முகாமைத்துவம் | - காலம் 03 மணித்தியாலம் | - 100 புள்ளிகள் |

பாடத்திட்டம் இந்த அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) **நேர்முகப் பரீட்சை** : எழுத்து மூலப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் ஆகக் குறைந்தது 40 வீதப் புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ள பரீட்சார்த்திகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சைக்கு அழைக்க வேண்டிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையானது தேவைக்கேற்ப எழுத்து மூலப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் ஒழுங்குமுறை மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை என்பவற்றின் பிரகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். அரசாங்க சேவை ஆணைக்கழுவின் அறிவுரையின் பிரகாரம் எழுத்துமூலப் பரீட்சையின் பெறுபேறுகள் சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை ஆணையாளரினால் அறிவிக்கப்படும்.

15. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிமூலங்களில் வெளியிடப்படுகின்ற இந்த அறிவித்தலை ஒவ்வொரு மொழியிலும் வெளியிடும் போது யாதேனும் வித்தியாசம் காணப்படின் சிங்கள மொழியில் வெளியிடப்படும் அறிவித்தலே வலுப்பெறும்.

16. **நியமனம் செய்வதற்கு தெரிவுசெய்யும் முறை** : திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகளில் உச்ச புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ள திறமையின் ஒழுங்கு முறைப்படி மற்றும் நேர்முகப் பரீட்சையில் அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்துள்ளதாக உறுதிப்படுத்தப்படுகின்ற நபர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். நேர்முகப் பரீட்சைக்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர்கள் சம அளவான புள்ளிகளைப் பெற்றிருப்பின் தெரிவு செய்வதற்கான இறுதித் தீர்மானம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் காணப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

ஜே. ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
பொது நிர்வாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும்
கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும்
கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சு,
கொழும்பு 07.
2019, யூலை மாதம் ........... ஆந் திகதி.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இற்கான பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட/திறந்த போட்டிப் பரீட்சை -2017/2018**

**OPEN/ LIMITED COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO GRADE III OF SRI LANKA ACCOUNTANTS' SERVICE - 2017/2018**

| | |
|---|---|
| பரீட்சை இலக்கம் :<br>(அலுவலக பயன்பாட்டிற்காக) | |
| பரீட்சைக்குத் தோற்றும் நகரம் | நகர இலக்கம் |
| | |
| விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரம் மற்றும் நகர இலக்கம் என்பவற்றினைக் குறிப்பிடவும்.<br>(கொழும்பு - 1, யாழ்ப்பாணம் - 2) * நகரத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. | |
| பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :<br>சிங்களம் - 2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4 (உரிய இலக்கத்தைப் பெட்டியினுள் எழுதவும்)<br>* பரீட்சை மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. | ☐ |
| நீங்கள் விண்ணப்பிப்பது திறந்த பரீட்சைக்கா / மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கா அல்லது இரண்டுக்குமா என்பது பற்றி<br>மட்டுப்படுத்தப்பட்ட -1, திறந்த -2, இரண்டுக்கும் -3<br>(உரிய இலக்கத்தைப் பெட்டியினுள் எழுதவும்)<br>* விண்ணப்பிக்கப்படும் பரீட்சை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. | ☐ |

1.

1.1 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :..................................................

(உ+ம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 கடைசிப் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் பின்னரும் வருமாறு (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்):..................................................

(உ+ம் : GUNAWARDHANA, H.M.S.K)

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்): ..................................................

2. நிரந்தர முகவரி : ..................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

2.1 நிரந்தர முகவரி : ..................................................
(சிங்களத்தில்/தமிழில்)

2.2 அலுவலக முகவரி :..................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

2.3 அலுவலக முகவரி :..................................................
(சிங்களத்தில்/தமிழில்)

2.4 அனுமதிப் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி :..................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

..................................................

அரசாங்க சேவை/மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் அவரது அலுவலக முகவரியை எழுதுதல் வேண்டும். முகவரியில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படும் பட்சத்தில், அதுபற்றி உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

3.

3.1 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

3.2 பால்: பெண் - 1, ஆண் - 0 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

3.3 விவாகமானவரா/விவாகமாகாதவரா என்பது பற்றி: ☐
விவாகமானவர் - 1, விவாகமாகாதவர் - 2 (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

3.4 தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

3.5 பிறந்த திகதி :

ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

3.6 2019, ஒகத்து மாதம் 02 திகதியன்று வயது :

வருடங்கள்: | | | மாதங்கள்: | | | நாட்கள்: | | |

4. (திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்களினால் நிரப்புவதற்காக) பின்வரும் விபரங்களை வழங்கவும்

4.1 அறிவித்தலின் 4.1 பந்தியின் கீழ் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெறுவதற்காக பெற்றுள்ள தகைமைகள்:..................................................

4.2 அத்தகைமைகளைப் பெற்றுக்கொண்ட நிறுவனங்கள்:..................................................

5. (மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்களினால் நிரப்புவதற்காக) பின்வரும் விபரங்களை வழங்கவும்)

5.1 அறிவித்தலின் 4.2 பந்தியின் கீழ் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெறுவதற்காக பெற்றுள்ள தகைமைகள்: ................................................................................

5.2 அத்தகைமைகளைப் பெற்றுக்கொண்ட நிறுவனங்கள்

(அ)

| பணியாற்றியுள்ள திணைக்களங்கள் | பதவி | முதல் | வரை | கால எல்லை |
|---|---|---|---|---|
| | | | | |

(ஆ)

i. சேவை/பதவி:........................................................

ii. வகுப்பு:........................................................ ஆம் திகதி முதல்

iii. வகுப்பு:........................................................ ஆம் திகதி முதல்

iv. 2019.08.02 ஆந் திகதியன்று (அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படும் தினத்தன்று) அரசாங்கத்தின் கீழ் மொத்த சேவைக் காலம்:

வருடங்கள் : ................................ மாதங்கள் ................................

(அ) மேற்படி ii இல் சேவை: வருடங்கள: ................................ மாதங்கள் ................................

(ஆ) மேற்படி iii இல் சேவை: வருடங்கள் ................................ மாதங்கள் ................................

v. 2019.08.02 ஆந் திகதியன்று வருடாந்தச் சம்பளம் : ................................

6.

6.1 இலங்கைக் கணக்காளர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு (வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்காக விசேடமாக நடாத்தப்பட்ட விசேட மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை அடங்கலாக) நீங்கள் தோற்றிய ஆண்டுகள்:

1................................

2................................

3................................

6.2 இலங்கைக் கணக்காளர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு (வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்காக விசேடமாக நடாத்தப்பட்ட விசேட திறந்த பரீட்சை அடங்கலாக) நீங்கள் தோற்றிய ஆண்டுகள்:

1................................

2................................

3................................

7. பணம் செலுத்திய பற்றுச் சீட்டை கழறாதவாறு விண்ணப்பத்தில் ஒட்டவும்.

| |
|---|
| பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டை இங்கே ஒட்டுங்கள் (பற்றுச்சீட்டின் நிழற்பிரதியொன்றினை தங்களிடம் வைத்துக் கொள்ளவும்). |

i. செலுத்திய தொகை: ரூபா : ................................

ii. பணம் செலுத்திய இடம்: ................................

iii. பற்றுச்சீட்டு இலக்கம் : ................................

iv. பணம் செலுத்திய திகதி : ................................

8. விண்ணப்பதாரரின் சான்றிதழ்:

8.1 இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையிலும் எனது நம்பிக்கையின் பிரகாரமும் உண்மையானவை எனவும், பரீட்சைக் கட்டணம் செலுத்திய இலக்கம் ................................ கொண்ட .................. ............. ஆந் திகதிய பற்றுச்சீட்டு இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட விரும்புகிறேன். மேலும், பரீட்சை ஒழுங்கு விதிகளின் பிரகாரம் செயற்படுவதற்கும், இப்பரீட்சைக்குரிய நிபந்தனைகளின் பிரகாரம் நான் தகுதியற்றவரென அடையாளம் காணப்படும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது அது நடைபெறும் வேளையில்

அல்லது அதன் பின்னர் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் எனும் தீர்மானத்திற்கு நான் உடன்படுவதாகவும், பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளரினால் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கு நான் உடன்படுவதாகவும் உறுதியளிக்க விரும்புகிறேன்.

8.2 2019.08.02 ஆந் திகதிக்கு (அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படும் தினத்தன்று) முந்திய ஐந்து வருடக் காலப் பகுதியினுள் (சேவை அல்லது திணைக்கள நிபந்தனைகளில் ஒன்றான சம்பள ஏற்றம் தவிர்ந்த) சகல சம்பள ஏற்றங்களும் என்னால் உழைக்கப்பட்டுள்ளது எனவும், (எச்சரிக்கை விடல் தவிர்ந்த) எதுவித ஒழுக்காற்று தண்டனைக்கும் நான் ஆளாகி இல்லை எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி: ................................ ...................................................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

9.

9.1 திணைக்களத் தலைவரின் சான்றிதழ்: (மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து விண்ணப்பதாரர்களும் மற்றும் தேவையாயின் மாத்திரம் திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்களினால் பூரணப்படுத்துதல் வேண்டும்.) தமது பிரத்தியேக கோப்புக்களை பேணிவரும் அலுவலகத் தலைவரே திணைக்களத் தலைவராக கையொப்பமிடுதல் வேண்டும்.)

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் .............................................................. எனும் பெயருடைய விண்ணப்பதாரர் ................................ ஆந் திகதி முதல் இந்த அலுவலகத்தில் பணியாற்றுவதாகவும், அவரது வேலை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானவை எனவும், மேற்படி 06 இல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்தும் இந்த அலுவலகத்திலுள்ள ஆவணங்களில் இருந்து நான் தனிப்பட்ட முறையில் பரீட்சித்துப் பெற்றுக் கொண்டவை எனவும், 2019 ............ ................... மாதம் ................................ ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கைச்சாத்திட்டதாகவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி................................ ................................,
திணைக்களத் தலைவரின் ஒப்பம்

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர்: ................................
பதவி: ................................
முகவரி: (இறப்பர் முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்)

9.2 உறுதிப்படுத்துதல். (திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்களினால் தேவையாயின் மாத்திரம் உறுதிப்படுத்துதல் வேண்டும்.)

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் ................................ எனும் பெயருடைய விண்ணப்பதாரரை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும் எனவும், அவர் என் முன்னிலையில் இங்கு கைச்சாத்திட்டதாகவும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதாகவும், அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதாகவும் உறுதிப்படுத்துகிறேன்.

................................,
(உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்)

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர்: ................................
பதவி: ................................
முகவரி: ................................
திகதி : ................................

**குறிப்பு**: விண்ணப்பத்தில் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்தில் விண்ணப்பதாரியின் ஒப்பத்தினை உறுதிப்படுத்துதல் வேண்டும். யாதேனுமொரு நிறுவனத்தில் இருந்து பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி தனது ஒப்பத்தினை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர் மூலம், அவ்வாறின்றிய சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரி தனது ஒப்பத்தினை அரசாங்க பாடசாலையின் அதிபர், பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, நொத்தாரிசு, அரசாங்க மற்றும் மாகாண சேவையின் அல்லது பதவிநிலைத் தர அலுவலரிடம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**பின்னிணைப்பு -1**

**இலங்கைக் கணக்காளர் சேவையின் தரம் III இற்கு நியமிப்பதற்காக நடாத்தப்படும் திறந்த/வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சைகள் தொடர்பான பாடத்திட்டம் பற்றிய விபரம் :**

*பரீட்சை பின்வரும் வினாத்தாள்களைக் கொண்டிருக்கும்:-*

**பகுதி 'அ'**

| இல. | விடயங்கள் | ஆகக் கூடிய புள்ளிகள் | சித்திப் புள்ளி | காலம் |
|---|---|---|---|---|
| 01 | நிதிக் கணக்கியல் I | 100 | 40 | காலம் 03 மணித்தியாலம் |
| 02 | நிதிக் கணக்கியல் II | 100 | 40 | காலம் 03 மணித்தியாலம் |
| 03 | செலவினம் மற்றும் முகாமைத்துவக் கணக்கியல் | 100 | 40 | காலம் 03 மணித்தியாலம் |
| 04 | கணக்காய்வு மற்றும் விசாரணை | 100 | 40 | காலம் 03 மணித்தியாலம் |
| 05 | பொது விவேகம் மற்றும் கிரகித்தல் | 100 | 40 | காலம் 03 மணித்தியாலம் |
| 06 | அரச நிதி முகாமைத்துவம் | 100 | 40 | காலம் 03 மணித்தியாலம் |

**பாடத் திட்டம்:**

**பாட இலக்கம் 01 மற்றும் 02 நிதிக் கணக்கியல் I மற்றும் II**

*நிதிக் கணக்கீட்டின் அபிப்பிராயம் மற்றும்*
*கணக்குகளைப் பயன்படுத்துவோரும் அவர்களுக்குத் தேவைப்படும் தகவல்களும்*
*கணக்கீட்டு முறைமை*

*கணக்கீட்டுச் சமன்பாடுகள், இரட்டைக் கணக்குப் பதிவு முறையும் கணக்கீட்டு முறைமைகளும், ஆரம்பப் பதிவேடுகளும் பேரேடுகளும், மீதியினைப் பரீட்சித்தல், திரண்ட முற்பணக் கொடுப்பனவுகள், சீராக்கங்கள், மூலதன செலவினம், வருமானச் செலவு, பெறுமானத் தேய்வு, தொங்கல் கணக்குகளும் தவறுகளை நிவர்த்தி செய்தல், கட்டுப்பாட்டுக் கணக்கு, கணக்கிணக்கக் கூற்றுகள், பூரணப்படுத்தப்படாத அறிக்கைகள்.*

**இறுதிக் கணக்குகள்**

*உற்பத்திக் கணக்கு, வியாபார இலாப நட்டக் கணக்குகள், ஐந்தொகை, நிதிப் பாய்ச்சல் கூற்று மற்றும் ஒதுக்கீட்டுக் கணக்கு.*

**பங்குடமை கணக்கீடு**

*பங்குடமை உடன்படிக்கைகள், பங்குடமையில் கணக்கு பதிவுகள், நிலையான மூலதனக் கணக்குகள், நடைமுறைக் கணக்குகள், கடன் கணக்குகள், மீளப் பெறல் கணக்குகள், பங்குடமை இறுதிக் கணக்கினைத் தயாரித்தல், பங்குடமை இணைப்பு மாற்றங்கள், நன்மதிப்பினைப் பேணுதலும் பங்காளர்களை அனுமதித்தலும், பிற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதான நடவடிக்கைகள், பங்குடமையைக் கலைத்தல், கூட்டு முயற்சிகள்.*

**பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் கணக்கீடு**

*பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் தன்மை, உத்தியோக நிரல்படுத்தப்பட்ட கம்பனிகள் மற்றும் பங்குச் சந்தை, பங்குடமை மற்றும் கடன் மூலதனம், பகிரத்தக்க இலாபம், உள்ளக மற்றும் வெளி பயன்பாட்டிற்கான இறுதிக் கணக்குகள், கணக்குக் கூற்றுக்களுக்கான பொருள்கோடல், கணக்குத் தொகுதியொன்றினை விவரித்தல், கணக்கீட்டு விகிதங்கள்.*

**விசேட கொடுக்கல் வாங்கல்களுக்கான கணக்கீடு**

*கம்பனிகள், சங்கங்கள், கையிருப்பு, வாடகைக் கொள்வனவும் கடன் விற்பனைகளும், குத்தகைக்கு விடல், முதலீடுகள், செலாவணி உண்டியல்கள், நீண்டகால ஒப்பந்தங்கள், வேத்துரிமைகள், வெற்றுக் கணக்குகள், வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள்.*

**கணக்கீட்டு நடவடிக்கைகளுக்கு கணினிகளைப் பயன்படுத்தல்**

*கணினிகளின் வகைகள்/வன்பொருள் மற்றும் மென்பொருள், கணினிச் செயற்பாடுசார் மென்பொருள், இலத்திரனியல் கணக்குத் தாள்கள், கணினிமயப்படுத்திய கணக்கீடு.*

**விடய இல.03 - செலவினம் மற்றும் முகாமைத்துவக் கணக்கியல்**

*செலவினக் கணக்கீடு, நிதிக் கணக்கீடு, முகாமைத்துவக் கணக்கீடு,*
*செலவுக் கணக்கீட்டின் நோக்கம்,*
*கணக்கியலை முகாமைத்துவத் துணைக் கருவியாகப் பயன்படுத்தல்.*

**பொருட் செலவு**

*கொள்வனவு நடைமுறைகள், களஞ்சிய முறைகள், பொருள் விநியோகித்தலை மதிப்பீடு செய்யும் முறைகள், ஊக்குவிப்புக் கொடுப்பனவும் மிகையூதியக் கொடுப்பனவும்.*

**ஊழியச் செலவு**

*நேரம் பதிதல், நேரம் ஒதுக்குதல், சம்பளக் கொடுப்பனவு முறைகள், மிகையூதியக் கொடுப்பனவுகளும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும், சம்பளங்கள் மற்றும் கூலிகள் என்பவற்றினை புத்தகப் பதிவு வைத்தல்.*

**பொது விடயங்களுக்கான செலவுகள்**

*வகைப்படுத்தல்கள், ஒதுக்கங்கள் மற்றும் விநியோகம், அகற்றல் முறைகள், பொது விடய நிருவாகம், வியாபாரம் மற்றும் விநியோகம் பற்றிய பொது விடயச் செலவுகள்.*

**திரண்ட மற்றும் திரளாத கணக்குகள்**

*செலவுக் கட்டுப்பாட்டுக் கணக்குகள், செலவு மற்றும் நிதிக் கணக்குகளின் கணக்கிணக்கம், முழுமைக் கணக்குகள்.*

**செலவீட்டு முறைகள்**

*ஒப்பந்தச் செலவீடு, தொழில் செலவீடு, திணைக்கள செலவீடு, பொருள் செலவீடு, செய்முறைச் செலவீடு, அலகு செலவீடு, சேவைகள் செலவீடு, வெவ்வேறு செலவீட்டு முறைமைகளின் கீழ் தேறப்பெறாத இலாபம்.*

**எல்லை நிலைச் செலவீடு**

*பங்களிப்புக்கள்/விற்பனை, சமவரவு குறிப்புக்கள், எல்லை நிலைச் செலவீட்டின் பிரயோகங்கள், எல்லை நிலைச் செலவீட்டுடன் தொடர்புடைய கணக்கீட்டுப் பதிவுகள்,*

**நியம செலவீடு**

*நியம செலவுகள், உண்மையான செலவுகள், அடிப்படை வேறுபாடுகள், கணக்கீட்டு நடைமுறைகள்*

**வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடு**

*தொழிற்பாட்டு வரவு செலவுத் திட்டம், பிரதான வரவு செலவுத் திட்டம், நெகிழ்வுத் தன்மைமிக்க வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடு, தொடர் வரவு செலவுத் திட்டவாக்கம் வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாட்டுத் தொழிற்பாடு.*

**விடய இல. 04 - கணக்காய்வும் விசாரணைகளும்**

**கணக்காய்வின் இயல்பு மற்றும் குறிக்கோள் - கணக்காய்வின் பொறுப்புக்கள்**

*உள்ளக கணக்காய்வு, புறக்கணக்காய்வு, சட்டவாக்கம் : இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் அரச திணைக்களங்கள், அமைச்சுக்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களுடன் தொடர்புடைய சட்ட மல்லாத – 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ், கணக்காய்வு நியமங்கள், கணக்காய்வு அபிப்பிராயங்கள், கணக்காய்வின் எண்ணக்கருக்கள், கணக்காய்வாளரது சுதந்திரமும் பிற ஆள்சார் பண்புகளும், உண்மை மற்றும் நியாயத் தன்மை, பௌதீகத் தன்மை, கணக்காய்வுத் தன்மைகள், கணக்காய்வாளரின் பொறுப்புகள், கணக்காய்வுக்கு உட்பட்டவரின் பொறுப்புகள்.*

**பாடத் திட்டமும் எல்லைகளும்**

பாடத் திட்டத்தை நிர்ணயித்தல், கருதுகோள் மற்றும் வரையறைகள்

**கணக்காய்வுத் தரங்கள் மற்றும் வழிகாட்டல்களின் பொறுப்புக்கள்**

கடமையாற்றுதல் கடிதங்களின், முகாமைத்துவ கடிதங்களின் மற்றும் பிரதிநிதித்துவ கடிதங்களின் பொறுப்புக்கள், அடிப்படை கணக்காய்வு முறைமைகள் மற்றும் மீளாய்விற்கான ஒழுங்கு விதிகள், உள்ளகக் கட்டுப்பாட்டு மதிப்பீடுகள்

அளவுத்திட்ட வரைபடங்கள், கேள்விக் கொத்துக்கள்

**கணக்காய்வுத் திட்டமிடலும் கட்டுப்பாடும்**

கணக்காய்வுத் திட்டமிடலும், நேரம் குறித்தல், இடைக்கால மற்றும் இறுதிக் கணக்காய்வு, செயற்பாடுகளுக்கு பொறுப்பு வழங்குதல், கணக்காய்வுக் கட்டுப்பாடு, உள்ளகக் கட்டுப்பாட்டுப் பயன்பாடு உள்ளடங்கலாக மேற்கொள்ளப்பட்ட வேலைகளை பதிவு செய்தல், உள்ளக வேலைகளை பதிவு செய்தல், உள்ளகக் கட்டுப்பாடு மதிப்பீட்டிற்கான வினாக் கொத்தக்கள் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு மதிப்பீட்டு படிவங்களையும் தயாரித்தல்.

**நிதிக் கணக்காய்வுக்கான பெறுமதிகள், எண்ணக்கருக்கள் மற்றும் பண்புகள்**

அது அரசாங்கத் துறையுடன் தொடர்புபடும் விதம், பகுப்பாய்வு ரீதியான கணக்காய்வு

**கணினிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையின் கணக்காய்வு - வரையறுக்கப்பட்ட கம்பனிகள்**

நியதிச்சட்ட ஆவணங்கள், பணிப்பாளர்களின் தத்துவங் களும் கடமைகளும், பங்கிடக் கூடிய இலாபங்கள், கணக்காய் வாளர்களின் நியமனம், ஊதியமும் நீக்கமும், புதிய கணக்காய் வாளர்களை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், கணக்காய்வாளர்களின் தத்துவங்களும் கடமைகளும்.

**பரிசோதனைகளின் தன்மையும் அளவும்**

ஒப்பீட்டுப் பரீட்சை, சுயாதீனமான பரிசோதனை, மாதிரி நுட்பங்கள், ஐந்தொகை சரிபார்த்தல், வருமான செலவின கணக்குகளை சரிபார்த்தல்.

**கணக்காய்வாளர்கள் மற்றும் கணக்காளர்களின் தொழில் சார் பொறுப்புக்கள்**

தொழில்சார் நடத்தையும் ஒழுக்கவியலும், சட்ட உரிமைகளும் பொறுப்புகளும், கணக்காளர் மற்றும் கணக்காய்வாளர்களின் சட்ட ரீதியான பொறுப்பும் நிகழ்வுகள் தொடர்பான சட்டரீதியான விடய அறிவுடன் தொடர்புடைய சட்டங்களும்.

**விசாரணைகள்**

விசாரணையுடன் தொடர்புடைய பாடத் திட்டத்தை திட்டமிடல், பயன்படுத்த வேண்டிய நுட்பங்களும் நடைமுறைகளும், புலனாய்வு நடத்துவதற்கான எண்ணத்தின் உதாரணங்கள், சாத்தியவள ஆய்வுகள், கொள்வனவு, விற்பனை, கடன் வழங்கல், விலையிடல் போன்ற வியாபார நிறுவனங்களின் மதிப்பீடுகள். தகவல் தொகுப்பு அறிக்கைகளுக்கான கணக் காளர்கள், கணக்காய்வாளர்களின் அறிக்கை, அறிக்கை யிடல் செயற்பாடுகள், மோசடி புலனாய்வுகள், கருத்திட்ட மதிப்பீடுகள்.

**அறிக்கையிடல் தொழிற்பாடுகள்**

உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையில் பலவீனங்கள் பற்றி முகாமைக்கு அறிவித்தல், அரச மற்றும் கூட்டுத்தாபன கணக்காய்விற்கு எழுத்து மூலம் விசேட அறிக்கையிடல் பணிகள், தகவற்தொகுப்பு அறிக்கைகள், விசாரணை அறிக்கைகள்.

**விடய இல. 05 பொது விவேகமும் கிரகித்தலும்**

**பகுதி 'அ'**

கிரகித்தல் வினாத்தாளில் தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளிக்குமாறு பரீட்சார்த் திகள் கேட்கப்படுவர். இன்னுமொரு உரைப்பகுதியும் தரப்படும், அதன் சாராம்சத்தை உரைப்பகுதியிலுள்ள சொற்களில் மூன்றிலொரு பகுதிக்கு சுருக்குமாறு கேட்கப்படும்.

**பகுதி 'ஆ'**

**விவேகம்**

**விடய இல.06 - அரச நிதி முகாமைத்துவம்**

**அரச நிதி தொடர்பான சட்டத் தன்மை**

திரண்ட நிதியம், விசேட சட்டச் செலவினம், நானாவித நிதியம், அரச படுகடன், வெளிநாட்டு உதவி, அரசிறைச் செயல்முறைகள்.

**பொறுப்புக்கள்**

பாராளுமன்றத்தின், நிதி அமைச்சரின், திறைசேரியின் கணக் காளர் நாயகத்தின், கணக்காய்வாளர் நாயகத்தின், அரச கணக்குகள் குழுவின், அரச தொழில் முயற்சிகள் குழுவின், பிரதான கணக்கீட்டு அலுவலரின், தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் மற்றும் நாணயச் சபையின் பொறுப்புக்கள்.

**வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டமூலம்**

வரவு செலவுத் திட்ட முறைமையும் நடைமுறைகளும், வருமான செலவின மதிப்பீடுகளும்

**வரவு செலவுத் திட்டத்தை செயற்படுத்துதல்.**

வரவு செலவுத் திட்டத்தை செயற்படுத்துவதற்கான ஒழுங் குக் கட்டமைப்பு, வருமான சேகரிப்பு ஒழுங்கு விதிகள், கொடுப்பனவு செலுத்துவதற்கான கட்டு நிதி, நிதி தொழிற் பாடுகளின் கண்காணிப்பு, பணிகளை கையளித்தல்,

ஒம்புட்ஸ்மன் நடைமுறைகள், வீரமொங் ஒழுங்கு விதிகள், குறைநிரப்பு மதிப்பீடுகள், வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடு, கொள்வனவு நடைமுறைகள்.

**அரசாங்க கணக்கீட்டு முறைமையும் நடைமுறைகளும்**

அரசாங்க சொத்துக்கள் பற்றிய பொறுப்புக்கள், வருமானம் மற்றும் ஏனைய கிடைப்பனவுகள் பற்றிய கணக்கீட்டுச் செலவினம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளுக்கான கணக்கீடு, வெளிநாட்டு உதவிக்கான கணக்கீடு, நட்டத்தை கைவிடல் மற்றும் பதிவழித்தல் பற்றிய கணக்கீடு.

**மீளாய்வு**

உடனடி அறிக்கைகள், மாதாந்த கணக்குச் சுருக்கங்கள், நிதி மற்றும்பௌதீகசெயலாற்றுகை மீளாய்வு, வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கு, நாட்டின் கணக்குகள் பற்றிய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை, அரச கணக்குகள் குழுவின் சாராம்சம், அரச தொழில் முயற்சிகள் குழுவின் அறிக்கை.

08-208

---

**திருத்தம்**

**2018-2019 ஆம் ஆண்டிற்கான தாதி வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கைநெறிக்காக விஞ்ஞானவியல் தாதியர் பட்டதாரிகளை ஆட்சேர்ப்பதற்காக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் திருத்தம் செய்தல்**

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் தாதி வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கை நெறிக்கு விஞ்ஞானவியல் தாதிப் பட்டம் பெற்றுக்கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோருவதற்காக வெளியிடப்பட்ட 2019.04.05 ஆந் திகதிய 2118 எனும் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் 03. (ஊ), (எ), 04. (ஈ), 06. மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவத்தில் 07. (ஆ) ஆகிய பிரிவுகள் கீழுள்ளவாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளதுடன் ஏனைய பிரிவுகள் மாற்றங்கள் இன்றிக் காணப்படும்.

வசந்தா பெரேரா,
செயலாளர்,
சுகாதார, போசணை மற்றும்
சுதேச வைத்திய அமைச்சு.

சுகாதார, போசணை மற்றும் சுதேச
வைத்திய அமைச்சு,
இலக்கம் 385, வண. பத்தேகம விமலவங்ச
தேரோ மாவத்தை,
கொழும்பு 10,
2019, யூலை மாதம் 19.

**சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு**

**தாதி வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கைநெறிக்காக விஞ்ஞானவியல் தாதியர் பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளல் 2018-2019**

03. (ஊ)

2019.08.16 ஆந் திகதிக்கு 18 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

03. (எ)

உரிய பட்டம் வலுப்பெறும் தினம் 2019.08.16 ஆந் திகதிக்கு முற்பட்ட திகதியாக இருத்தல் வேண்டும்.

04. (ஈ)

முறையாக பூர்த்தி செய்த விண்ணப்பத்தை கடித உறையில் இட்டு அக்கடித உறையின் இடதுபக்க மேல் முனையில் "தாதி வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கை நெறி பயிற்சிக்காக விஞ்ஞானவியல் தாதி பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளல் 2018-2019" எனவும் உரிய பட்டம் மற்றும் கல்வி ஆண்டு என்பவற்றையும் குறிப்பிட்டு பணிப்பாளர் (நிர்வாகம்) 01, சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு, "சுவசிறிபாய", இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு-10 எனும் முகவரிக்கு 2019.08.16 ஆந் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

*குறிப்பு* : மேற்படி (2) மற்றும் (3) கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் ஏனைய சகல தகைமைகளையும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியான 2019.08.16 ஆந் திகதிக்கு சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

06.

இந்த பொது சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கு அமையாத, பூரணப்படுத்தப்படாத மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் அமையாத விண்ணப்பங்கள், வங்கிப் பற்றுச்சீட்டு ஒட்டப்படாத மற்றும் 2019.08.16 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுசெய்யப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும் என்பதுடன், விண்ணப்பம் கிடைக்கப் பெற்றமை தொடர்பில் அறிவிக்கப்படமாட்டாது.

மாதிரி விண்ணப்பப்படிவத்தில் 07. (ஆ)

2019.08.16 ஆந் திகதிக்கு வயது : வருடங்கள் :......................
மாதங்கள் :.................... நாட்கள் :....................

08-179

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

பொது நிர்வாக அனர்த்த முகாமைத்துவ மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சு

## இலங்கை விஞ்ஞான சேவையின் III ஆந் தரத்துக்குரிய பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018 (2019)

கீழே குறிப்பிடப்பட்டுள்ள திணைக்களங்களில் நிலவுகின்ற இலங்கை விஞ்ஞான சேவையின் III ஆந் தரத்துக்குரிய பதவிக்கான 37 வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு நடாத்தப்படவுள்ள குறித்த ஆட்சேர்ப்புக்கான திறந்த போட்டிப் பரீட்சை தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம் தகுதியுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சை 2019, கார்த்திகை மாதம் கொழும்பில் நடாத்தப்படவுள்ளது. இவ் அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியவாறு "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு (நிறுவன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு. எனும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை விஞ்ஞான சேவையின் III ஆந் தரத்துடைய பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான திறந்த போட்டிப் பரீட்சை-2018 (2019)" எனத் தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும். மேலும், பரீட்சையின் பெயர் சிங்கள மொழி மூல விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் மொழி மூல விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

| தொடர் இல. | வெற்றிடம் நிலவுகின்ற திணைக்களம் | பதவிப்பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | குறியீட்டு எண் |
|---|---|---|---|---|
| 01. | அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களம் | உதவிப் பகுப்பாய்வாளர் | 27 | 01 |
| | | சந்தேகத்திற்கிடமான ஆவணங்கள் தொடர்பான உதவி அரசாங்க பகுப்பாய்வாளர் | 04 | 02 |
| 02. | வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களம் | பிரதிப் பணிப்பாளர்/உதவிப் பணிப்பாளர் | 03 | 03 |
| 03. | நீர்ப்பாசனத் திணைக்களம் | புவிச்சரிதவியலாளர் | 02 | 04 |
| 04. | தொழில் திணைக்களம் | ஆராய்ச்சி அலுவலர் (தொழில்சார் சுகாதாரம்) | 01 | 05 |

(அ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2019.08.30 ஆகும்.

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பான ஆவணம் தபாலில் காணாமற் போனமை தொடர்பாக மற்றும் தாமதமானதாக கிடைக்கப்பட்டமை தொடர்பாக செய்யப்படும் முறைப்பாடுகள் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கெள்ளப்படும் இறுதித் திகதி வரை விண்ணப்பப் படிவத்தை தாமதப்படுவதனால் ஏற்படக்கூடிய இழப்புக்கு பரீட்சார்த்திகளே பொறுப்பேற்றல் வேண்டும்.

எவரேனும் ஒரு அலுவலர் மேற்கூறப்பட்ட ஒரு பதவியை விட மேலதிகமான பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் போது மற்றொரு விண்ணப்பப்படிவத்தினை சமர்ப்பிக்கப்படலாகாது என்பதுடன் அவ்வந்த பதவிகளுக்கான விருப்பத்தின் பேரில் ஒழுங்கு முறைப்படி ஒரே விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடுதல் வேண்டும். அவ்வாறே விருப்ப ஒழுங்கினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

*1. **ஆட்சேர்ப்பு முறைமை**.- எழுத்துமூல பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில், ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்கும் 40% புள்ளிகள் அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளின் புள்ளி ஒழுங்கிற்கு ஏற்பவும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விருப்பத்தின் பேரிலும் ஆட்சேர்க்கப்படுவார்கள். நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுபவர்களின் எண்ணிக்கை தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுவதோடு, விண்ணப்பதாரிகளின் தகைமைகள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவொன்றின் மூலம் பரீட்சிக்கப்படுவார்கள். நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.*

*குறிப்பு.- இலங்கை விஞ்ஞான சேவையின் அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவுகின்ற சந்தேகத்திற்கிடமான ஆவணங்கள் தொடர்பான உதவி அரசாங்கப் பகுப்பாய்வாளர் பதவிக்கு விண்ணப்பிக்கும்போது வெற்றிடமாகவுள்ள பதவிகள் (4) இல், இரண்டு (02) பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான அறிவித்தலில் அதற்குரிய கல்வித் தகைமைகள் (04) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு (அ), (ஆ), (இ) தகைமைகளுக்கு ஏற்பவும், எஞ்சிய பதவிகள் இரண்டிற்காக (ஈ), (உ), (ஊ) இன் கீழும் ஆட்சேர்ப்பு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

***2. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :***

(i) *இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். தங்களுக்குரிய ஓய்வூதியத்திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடர்ந்தேச்சையாக எடுக்கப்படுகின்ற கொள்கைசார் தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும் தாங்கள் விதவைகள் ஓய்வூதியத் திட்டம்/ தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் ஏற்பாடுகளுக்கு ஏற்ப தங்கள் பங்களிப்புத் தொகையை செலுத்துதல் வேண்டும் ;*

(ii) *இப்பதவி மூன்றாண்டுகால (3) தகுதிகாண் காலத்திற்குட்படுவதுடன், அம்மூன்றாண்டுகளுள் (03) முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும் ;*

(iii) *2014.01.21 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 01/ 2014 இன் ஏற்பாடுகள் மற்றும் அதற்கு நேரிடையான சுற்றறிக்கைகளுக்கு அமைய 05 வருடங்களுக்குள் மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சியை பெற்றுக்கொள்ளல் வேண்டும். அரசகரும மொழியல்லாத மொழியொன்றின் மூலம் சேவையில் இணைந்த அலுவலர்கள் தகுதிகாண் காலத்தினுள் (03 ஆண்டு காலத்தினுள்) ஒரு அரசகரும மொழியில் தேர்ச்சி பெற வேண்டும். அடுத்த அரசகரும மொழி தொடர்பாக தேர்ச்சியை 05 ஆண்டுகளுள் பெற்றுக்கொள்ளல் வேண்டும் ;*

(iv) *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவைக்கும், அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும், அரசாங்க சேவைகள் ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கும், 1877/ 27 ஐக் கொண்ட 2014, ஒகத்து மாதம் 28 ஆந் திகதிய வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்ட இலங்கை விஞ்ஞான சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பின் நிபந்தனைகளுக்கும், அதற்கேற்ப ஒவ்வொரு திணைக்களத்தின் அனுமதியளிக்கப்பட்ட ஆட்சேர்ப்பின் நிபந்தனைகளுக்கும் இப்பதவி உட்பட்டதாகும்.*

*3. **சம்பள அளவுத்திட்டம்**.- 2016.02.25 ஆந் திகதிய மற்றும் இல. 03/ 2016 அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் அட்டவணை* I *இற்கு ஏற்ப இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 47,615-10* x *1,335-8* x *1,630-17* x *2,170 - ரூபா 1,10,895 (*SL*-1-2016) ஆகும். 2020.01.01 ஆந் திகதி வரை உங்களுக்கு வழங்கப்படும் சம்பளம் அச்சுற்றறிக்கையின் அட்டவணை* II *இல் குறிப்பிட்டுள்ளதன் படியாகும்.*

4. **கல்வித் தகைமைகள் :**

| தொடர் இல. | திணைக்களம் | பதவி | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|
| 01. | அரசாங்கத்தின் பகுப்பாய்வாளர் திணைக்களம் | 1. அரசாங்க உதவிப் பகுப்பாய்வாளர் | பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து,<br>(அ) முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புச் சித்தியுடன் இரசாயனவியல் தொடர்பான விஞ்ஞானமானி சிறப்புப் பட்டத்தைப் பெற்றிருத்தல்<br>அல்லது<br>(ஆ) சாதாரண சித்தியுடன் இரசாயனவியல் தொடர் பான விஞ்ஞானமானி விசேட பட்டம் மற்றும் இரசாயனவியல் தொடர்பாக பட்டப்பின் பட்டத் தைப் பெற்றிருத்தல்<br>அல்லது<br>(இ) இராசயனவியலைப் பாடமாகக் கொண்ட விஞ்ஞான மானியில் சாதாரணப் பட்டம் மற்றும் இரசாயனவியல் தொடர்பாக பட்டப் பின் பட்டத்தைப் பெற்றிருத்தல். |
| | | 2. சந்தேகத்திற்கிடமான ஆவணங்கள் தொடர்பான உதவி அரசாங்க பகுப்பாய்வாளர் | பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து,<br>(அ) முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புச் சித்தியுடன் பௌதீகவியல் அல்லது இரசாயனவியல் தொடர் பான விஞ்ஞானமானி சிறப்புப் பட்டத்தைப் பெற்றிருத்தல்<br>அல்லது<br>(ஆ) சாதாரண சித்தியுடன் பௌதீகவியல் அல்லது இரசாயனவியல் தொடர்பான விஞ்ஞானமானி விசேட பட்டம் மற்றும் இரசாயனவியல் அல்லது பௌதீகவியலுடன் தொடர்பான பட்டப்பின் பட்டத்தைப் பெற்றிருத்தல்<br>அல்லது<br>(இ) பௌதீகவியல் அல்லது இராசயனவியலைப் பாட மாகக் கொண்ட விஞ்ஞானமானி சாதாரண பட்டம் மற்றும் இரசாயனவியல் அல்லது பௌதீகவியல் தொடர்பாக பட்டப்பின் பட்டத்தைப் பெற்றிருத்தல்.<br>க. பொ. த. (உ/த) விஞ்ஞானப் பாடப் பிரிவில் சித்தியெய்தியிருத்தல் மற்றும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து,<br>(ஈ) முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புச் சித்தியுடன் கணினியியல் அல்லது தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சிறப்புப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>(உ) சாதாரண சித்தியுடன் கணினியியல் அல்லது தகவல் தொழில்நுட்பம் தொடர்பாக சிறப்புப் பட்டத்தைப் பெற்றிருத்தல் மற்றும் கணினியியல் அல்லது தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டப்பின் பட்டத்தைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>(ஊ) கணினியியல் அல்லது தகவல் தொழில்நுட்பத்தை ஒரு பாடமாகக் கொண்ட சாதாரண பட்டம் மற்றும் கணினியியல் அல்லது தகவல் தொழில்நுட்பம் தொடர்பாக பட்டப்பின் பட்டத்தைப் பெற்றிருத்தல். |

| தொடர் இல. | திணைக்களம் | பதவி | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|
| 02. | வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களம் | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் | பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து,<br>(அ) முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புச் சித்தியுடன் உயிரியல் அல்லது தாவரவியல் தொடர்பான விஞ்ஞானமானி சிறப்புப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>(ஆ) முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புச் சித்தியுடன் தாவரவியல், உயிரியலை மேலதிக பாடமாகக் கொண்ட விலங்கியல் தொடர்பான விஞ்ஞானமானி சிறப்புப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>(இ) முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புச் சித்தியுடன் தாவரவியல், உயிரியல், வனவியல், இயற்கை வள முகாமைத்துவம் போன்றவற்றினை மேலதிகப் பாடமாகக் கொண்ட இரசாயனவியல் தொடர்பாக விஞ்ஞானமானி சிறப்புப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>(ஈ) முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புச் சித்தியுடன் சூழலியல், விவசாயவியல் அல்லது இயற்கை வள முகாமைத்துவம் தொடர்பான விஞ்ஞானமானி சிறப்புப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>(உ) முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புச் சித்தியுடன் விலங்கியல், தாவரவியல் அல்லது உயிரியல் ஆகிய இரு பாடங்களைக் கொண்ட விஞ்ஞானமானி சாதாரண பட்டத்தைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>(ஊ) முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புச் சித்தியுடன் வனவியல் மற்றும் சூழலியல், சூழல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம், தாவர உயிர்த் தொழில்நுட்பவியல் (Plant Biotechnology), மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர்த் தொழில்நுட்பவியல் (Molecular Biology & Biotechnology), விலங்கியல் மற்றும் கடற்றொழிலியல் (Animal Science & Fisheries) ஆகிய பாடங்களாகக் கொண்ட விஞ்ஞானமானி சிறப்புப் பட்டத்தை அல்லது சாதாரண பட்டத்தைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>(எ) விஞ்ஞானமானி சாதாரண பட்டத்துடன் வனவிலங்கு பாதுகாப்பு அல்லது வனவிலங்கு முகாமைத்துவம் அல்லது வனவியல் அல்லது சூழல் பாதுகாப்பு தொடர்பான பட்டப்பின் பட்டத்தைப் பெற்றிருத்தல். |

| தொடர் இல. | திணைக்களம் | பதவி | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|
| 03. | நீர்ப்பாசனத் திணைக்களம் | புவிச்சரிதவியலாளர் | பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து,<br>(அ) புவியியலை பிரதான பாடமாகக் கொண்ட விஞ்ஞானமானி சிறப்புப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>(ஆ) முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புச் சித்தியுடன் புவியியலை பிரதான பாடமாகக் கொண்ட விஞ்ஞானமானி சாதாரண பட்டத்தைப் பெற்றிருத்தல். |
| 04. | தொழில் திணைக்களம் | ஆராய்ச்சி அலுவலர் (தொழில்சார் சுகாதாரம்) | பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து,<br>(அ) முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புச் சித்தியுடன் இரசாயனவியல் தொடர்பான விஞ்ஞானமானி சிறப்புப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>(ஆ) இரசாயனவியல், தொழிற்துறை நச்சுயியல், தொழிற்துறை உடனலவியல் அல்லது சுற்றுச்சூழல் திருத்தப்பட்ட பிரயோக இரசாயனவியல் தொடர்பான பட்டப்பின் பட்டத்தைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>(இ) இலங்கை இரசாயனவியல் நிறுவனத்தில் அல்லது பிரித்தானியாவின் அல்லது அயர்லாந்தில் இரசாயனவியல் தொடர்பான அரசுக்குரிய நிறுவனமொன்றில் அங்கத்தவராக இருத்தல். |

5. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 22 வயதுக்குக் குறையாமலும் 36 வயதுக்கு மேற்படாதிருத்தலும் வேண்டும். அதற்கிணங்க வயது தொடர்பான தகைமை கணிக்கப்படுவது பிறந்த திகதி 1997.08.30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1983.08.30 ஆந் திகதிக்கு பின்னர் உள்ளவை மட்டுமாகும்.

6. **தேகாரோக்கியம்**.- எல்லா விண்ணப்பதாரர்களும் இலங்கையில் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கும், பதவிக்குரியதான கடமைகளை சிறப்பாக ஆற்றுவதற்கும், போதிய உடல் மற்றும் உள ரீதியான தகுதியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

7. **பிற தகைமைகள்** :

(i) விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும் ;

(ii) சிறந்த நன்னடத்தையுடையவர்களாக இருத்தல் வேண்டும் ;

(iii) ஏதேனும் சமயப் பிரிவொன்றின் போதகராக பதவி வகிக்கும் ஒருவர் விண்ணப்பிப்பதற்கு தகைமைபெற மாட்டார்;

(iv) இலங்கை விஞ்ஞான சேவையின் திறந்த போட்டிப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேல் தோற்றியிருக்கலாகாது ;

(v) ஆட்சேர்ப்பு அறிவித்தலுக்கு ஏற்ப விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியில், பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான அனைத்துத் தகைமைகளையும் எல்லா வகையிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

8.

8.1 **எழுத்துமூலப் பரீட்சை :**

8.1.1 இப்பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் ;

| வினாத்தாள் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. நுண்ணறிவு | 1 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. பொது அறிவு வினாத்தாள் | 3 மணித்தியாலம் | 100 | 40 |

8.1.2 பாடத்திட்டம் :

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| 1. நுண்ணறிவு | பரீட்சார்த்தியின் தர்க்கத்திறன், பொது அறிவு மற்றும் தீர்மானமெடுக்கும் ஆற்றல் ஆகிய விடயங்களை உறுதிப்படுத்துவது தொடர்பாக தயாரிக்கப்படும் இவ் வினாத்தாள் பல்தேர்வு மற்றும் சுருக்க விடை வழங்கும் வினாக்கள் 50 இனைக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது. சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். |
| 2. பொது அறிவு வினாத்தாள் | இலங்கையின் அரசியல், சமூக, கலாசார மற்றும் பொருளாதாரச் சூழல், தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக முக்கியத்துவம் பெறுகின்ற நவீன விடயங்களும், தேசிய மற்றும் சர்வதேச விஞ்ஞான, தொழில்நுட்ப அபிவிருத்தி சம்பந்தமாக அறிவினை பரிசோதிப்பது தொடர்பாக தயாரிக்கப்பட்ட பொது அறிவினை அளவீடு செய்யும் வினாத்தாளாகும். வினாத்தாள் இரு பகுதிகளைக் கொண்டதாகும். முதற் பகுதி சுருக்க வினாக்களைக் கொண்டதாகும். 25 புள்ளிகள் வழங்கப்படும். இரண்டாவது பகுதி பகுதியளவு கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டதாகும். இப்பகுதி 05 வினாக்களை கொண்டிருப்பதுடன் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கப்படல் வேண்டும். 75 புள்ளிகள் வழங்கப்படும். |

8.1.3 வினாப்பத்திரத்தின் இயல்பு.-

01. நுண்ணறிவு.- தெரிவுகள் 4 இனைக் கொண்ட பல்தேர்வு மற்றும் சுருக்க விடையளிக்கும் வகையைச் சேர்ந்த 50 வினாக்களைக் கொண்டுள்ளது. சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். (புள்ளி $2 \times 50 = 100$)

02. பொது அறிவு வினாப்பத்திரம் : இவ்வினாப்பத்திரம் 02 பகுதிகளைக் கொண்டமைந்துள்ளது.

(i) பகுதி : சுருக்க விடையளிக்கும் வினாக்கள் 25 ஆகும். (புள்ளி $1 \times 25 = 25$)

(ii) பகுதி : பகுதியளவிலான கட்டமைக்கப்பட்ட வினாக்கள் 05 ஆகும். (புள்ளி $15 \times 5 = 75$) சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

8.2 **பரீட்சைப் பெறுபேறுகள்**.- எழுத்துமூலப் பரீட்சையில் தகைமை பெற்ற பரீட்சார்த்திகளின் பெயர்கள் அடங்கிய பெறுபேற்று ஆவணம் செயலாளர், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்தியினதும் பெறுபேறுகள் தனிப்பட்ட வகையில் அறிவித்து அனுப்பப்படும் அல்லது (*www.result.exams.gov.lk*) என்ற இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

9. **பரீட்சை நிபந்தனைகள் :**

(i) இப்பரீட்சை 2019 கார்த்திகை மாதம் கொழும்பில் நடாத்தப்படும்.

(ii) பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடைபெறும். பரீட்சார்த்திகள் தாம் விரும்பும் மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சார்த்திகள் பரீட்சையின் சகல வினாப்பத்திரத்துக்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும். தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சை மொழி மூலத்தை மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சார்த்திகள் அனைவரும் சகல வினாப்பத்திரங்களுக்கும் விடையளித்தல் வேண்டும் ;

(iii) பரீட்சைக் கட்டணம் 600 ரூபாவாகும். அப்பரீட்சைக் கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவிட்டு நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு அஞ்சல் அலுவலகம்/ உப அஞ்சல் அலுவலகம் அல்லது மாவட்ட/ பிரதேச செயலகங்களிலும் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயருக்குப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் ஒரு ஓரத்தை விண்ணப்பத்தின் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டவும். அப் பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியை தம்மிடம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

(iv) விண்ணப்பப்படிவம் 22 × 29 செ. மீ. அளவுள்ள A4 கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படல் வேண்டியதுடன். இல. 1.0 - 3.11 வரையிலான தலைப்புக்கள் முதலாவது பக்கத்திலும் 3.12 தொடக்கம் ஏனையவை மற்றைய பக்கத்திலும் உள்ளடங்கும் வகையில் தயாரிக்கப்பட வேண்டும். குறித்த தகவல்களை தமது சொந்தக் கையெழுத்தில் தெளிவாக பூர்த்திசெய்தல் வேண்டும். அவ்வாறே மாதிரிப் படிவத்தை ஒத்திராத விண்ணப்பங்களும், முழுமையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். மேலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் வர்த்தமானி அறிவித்தலிலுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒத்ததாக உள்ளதா என பரீட்சார்த்திகள் உறுதிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை மேலும் அறியத்தருகின்றேன். விண்ணப்பப்படிவத்தினை இதனுடன் அமைந்துள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒத்ததாக தயாரிக்கவும்.

**குறிப்பு**.- உங்களது வசதிக்காக சரியாகத் தயாரிக்கப்பட்ட பரீட்சை விண்ணப்பம் பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் உத்தியோகபூர்வ www.pubad.gov.lk எனும் இணையத்தளத்தில் இருந்து தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

**போலியான தகவல்களுக்கு தண்டனை வழங்குதல்**.- விண்ணப்பங்களை நிரப்பும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப்பரீட்சையின் விதிமுறைகளுக்கு ஏற்ப எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின் போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தத் தன்மை செல்லுபடியற்றதாகும்.

(v) விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறியத்தரப்பட மாட்டாது. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் கருதுகோளின் அடிப்படையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பியதுடன் அது பற்றி குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் அறிவித்தல் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கழிந்த பின்பும் தமக்கு அனுமதி அட்டைகிடைக்கப்பெறாவிடின் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி அது தொடர்பாக பரீட்சைகள் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு (நிறுவன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளையிடம் விசாரித்தல் வேண்டும். அதன்போது விண்ணப்பதாரி தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் வதிவிட முகவரி போன்றவற்றினை சரியாக குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவராயின் பெயர் மற்றும் இதர விபரங்களுடன் பெக்ஸ் ஊடாக பரீட்சைக்கான அனுமதி அட்டையின் பிரதியை துரிதமாக பெற்றுக்கொள்ளக்கூடியதான பெக்ஸ் இலக்கத்தைக் குறிப்பிட்டு உங்களது கோரிக்கைக் கடிதமொன்றை வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பெக்ஸ் இலக்கத்திற்கு அறிவிப்பது பயனுடையதாக அமையும். அதன்போது பரீட்சைகள் திணைக்களத்தினால் கேட்கப்படும் தகவல்களை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் தங்களிடம் வைத்திருந்த விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டண பற்றுச்சிட்டின் பிரதி, விண்ணப்பப்படிவத்தை பதிவுத் தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டு ஆகியவற்றினை தம்மிடம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

**குறிப்பு**: பரீட்சை அனுமதி அட்டையின்றி பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சை ஆரம்பிக்கப்படும் திகதியில் பரீட்சை மேற்பார்வையாளருக்கு தனது கையொப்பத்தினை சான்றுப்படுத்திக் கொள்ளப்பட்ட அனுமதி அட்டையை மாத்திரமே கையளிக்கப்படவேண்டும்.

பரீட்சார்த்தி ஒருவருக்கு நுழைவுச்சீட்டு வழங்கப்படுவது என்பது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் என கருதப்படலாகாது.

(vi) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் பேரில் பரீட்சையை பிற்போடுதல் அல்லது இரத்துச் செய்வதற்கான அதிகாரம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கேயுண்டு.

(vii) பரீட்சை நடாத்துதல் மற்றும் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கும், ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அத்துடன் அவை மீறப்படும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு பரீட்சார்த்திகள் ஆளாக நேரிடும்.

(viii) **விண்ணப்பதாரரின் ஆளடையாளம்.**- பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியுறும் வண்ணம் பரீட்சை மண்டபத்தில் சகல பரீட்சார்த்திகளும் தனது ஆளடையாளத்தினை நிரூபிக்குமாறு கோரப்படுவார். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

கவனிக்க வேண்டியவை :

(அ) விண்ணப்பத்துடன் எதுவித ஆவணங்களோ அல்லது அதன் பிரதிகளையோ இணைத்து அனுப்பப்படலாகாது ;
(ஆ) ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படும் சந்தர்ப்பங்களில் ஆவணங்களினை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் தொடர்பாக கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.

(ix) பரீட்சைக்காக செலுத்திய பணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்படவோ அல்லது வேறு பரீட்சைக்காகவோ மாற்றியமைக்கப்படமாட்டாது. பரீட்சைக் கட்டணமாக முத்திரை அல்லது காசுக்கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

10. விண்ணப்பப்படிவத்திலும், பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்திலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அரசாங்க சேவை/மாகாண அரசாங்க சேவை, அரசாங்க கூட்டுத்தாபனங்களில் சேவை புரியும் அலுவலர்கள் அவர்களின் திணைக்களத் தலைவர்/நிறுவனத் தலைவரினூடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன் சகல பரீட்சார்த்திகளினதும் கையொப்பமானது உறுதிப்படுத்தப்பட வேண்டியது கட்டாயமாகும். குறித்த நிறுவனம் ஒன்றுக்கூடாக விண்ணப்பிக்கும் பரீட்சார்த்தி ஒருவரின் கையொப்பமானது நிறுவனத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் ஏனைய சகல பரீட்சார்த்திகளினதும் கையொப்பமானது அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர், பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரம்பெற்ற அலுவலர் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள பதவிநிலை அலுவலர் ஒருவர் அல்லது பௌத்த விகாரையின் தலைமைத் தேரர் அல்லது பிற மதங்களைச் சேர்ந்த சமயத்தலங்களுக்குப் பொறுப்பான பதவியிலுள்ள ஒருவர் ஆகிய யாரேனும் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

11. இவ் அறிவித்தல் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படும் வர்த்தமானி அறிவித்தலில் ஏதேனும் ஒரு மொழியில் முரண்பாடுகள் ஏற்பட்டால் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியிலான அறிவித்தலே வலுவானதாகவிருக்கும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ஜே. ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும்
கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சு.

2019, யூலை 19.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை விஞ்ஞான சேவையின் III ஆந் தரத்துடைய பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018 (2019)**

Open Competitive Examination for Recruitment to Grade III posts of Sri Lanka Scientific Service - 2018 (2019)

(அலுவலக உபயோகத்திற்காக)

1. மொழி மூலம் (பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொழி மூலம்) :

| | |
|---|---|
| சிங்களம் | 2 |
| தமிழ் | 3 |
| ஆங்கிலம் | 4 |

(குறித்த இலக்கத்தைக் கூட்டினுள் இடுக)

(விண்ணப்பம் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொழிமூலத்தில் நிரப்பப்படுதல் வேண்டும்.)

2. விண்ணப்பதாரியின் பதவி/பதவிகள் :

| பதவிப் பெயர் | குறியீட்டு எண் |
|---|---|
| | |

3. தனிப்பட்ட விபரங்கள் :

3.1 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :........................................
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

3.2 முதலெழுத்துக்கள் இறுதியில் வரும் வகையில் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் :- Mr./ Mrs/ Miss) :...............
........................................
........................................
(உதாரணம் : GUNAWARDHANA, H. M. S. K.)

3.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :........................................
........................................

3.4 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :........................................
........................................
(இந்த முகவரிக்கு பரீட்சை அனுமதிச்சீட்டு அனுப்பப்படும்)

3.5 நிரந்தர முகவரி (தமிழில்/சிங்களத்தில்) :........................................

3.6 தபால் நகரம் :........................................

3.7 தேசிய ஆள் அடையாள அட்டை இல. : | | | | | | | | | | | | |

3.8 ஆண்/பெண் :

| | |
|---|---|
| ஆண் | 0 |
| பெண் | 1 |

(குறித்த இலக்கத்தைக் கூட்டினுள் இடுக)

3.9 தொலைபேசி இலக்கம் : கையடக்க | | | | | | | | | | |

நிரந்தர | | | | | | | | | | |

3.10 பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.11 விண்ணப்பம் கோரப்படும் இறுதித்திகதியன்று வயது :

வருடங்கள்: ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

3.12 இனம் (சிங்களவர்-1, தமிழர்-2, இந்தியத் தமிழர்-3, முஸ்லிம்-4, வேறு-5 ☐

(குறித்த இலக்கத்தைக் கூட்டினுள் இடுக)

3.13 திருமணமானவரா/ஆகாதவரா என்பது பற்றி :-

| | |
|---|---|
| திருமணமானவர் | 1 |
| திருமணமாகாதவர் | 2 |

☐

(குறித்த இலக்கத்தைக் கூட்டினுள் இடுக)

3.14 மின்னஞ்சல் முகவரி :----.

4. தகைமைகள் :

4.1 பட்டம் பெற்ற திகதி :----.
இந்த தகுதிகள் உள்ளனவா என பார்ப்பதற்கு அறிவித்தலின் (4) தயவு செய்து நன்றாக வாசிக்கவும்) :

| பரீட்சை/பட்டம் | வகுப்பு | ஆண்டு | பாடங்கள் | பல்கலைக்கழகம்/ நிறுவனம் |
|---|---|---|---|---|
| | | | | |

5. பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை கழறாதவாறு ஒட்டவும் :

| |
|---|
| பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை வைத்திருப்பது பயனுள்ளதாகும். |

பற்றுச்சீட்டின் இலக்கம் :----.
செலுத்திய அஞ்சல் அலுவலகம் :----.
திகதி :----.

6. ஏதேனும் குற்றமொன்றுக்கு எப்போதாவது நீதிமன்றத்தில் குற்றவாளியாகி இருப்பின், அந்தக் குற்றம் மற்றும் பெற்ற தண்டனை தொடர்பாக குறிப்பிடவும் :----.

7. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இந்த விண்ணப்பத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் உண்மையானவையெனவும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட .................... ஆந் திகதிய ........................ ஆம் இலக்க பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளதெனவும் உறுதியுரைக்கின்றேன். மேலும் பரீட்சை விதிகளுக்கு அமைந்தொழுகி நடப்பேன் எனவும் இப்பரீட்சை ஒழுங்குவிதிகளின்படி நான் தகுதியற்றவரென கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சையின் முன்னரோ, பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எனது பரீட்சார்த்தத் தன்மையை இரத்துச்செய்வதற்கு எடுக்கும் முடிவுகளை ஏற்றுக்கொள்வேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு விடயம் உண்மைக்குப் புறம்பாகவும் பிழையாகவும் இருப்பதாக, நியமனத்திற்குப் பின்னர் தெரியவரும் பட்சத்தில் நட்டஈடு ஏதுமின்றி நியமனம் இரத்துச் செய்யப்படும் என்பதையும், மேலும் பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கும் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பாக எடுக்கப்படும் முடிவுகளுக்கும் கட்டுப்படுவேன் எனவும் உறுதியுரைக்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

8. திணைக்களத் தலைவரின் உறுதியுரை : (வர்த்தமானி அறிவித்தல் 10 இன் பிரகாரம் இருத்தல் வேண்டும்)

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் ..................................................... (முழுப்பெயர்) என்பவரை நான் தனிப்பட்ட வகையில் நன்கறிவேன் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் எனவும், அப்பற்றுச் சீட்டினை ஒட்டியுள்ளார் எனவும், ................... ஆந் திகதி எனது முன்னிலையில் அவர் கையொப்பமிட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(உத்தியோகபூர்வ முத்திரையினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)
திகதி :----.

9. நிறுவனத் தலைவரின் சான்றுரை :

(அரசாங்க/மாகாண அரசாங்க/அரச கூட்டுத்தாபனங்களில் கடமையாற்றும் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமாகும்).

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற ............................................................ திரு./ திருமதி/ செல்வி இவ்வமைச்சில்/ திணைக்களத்தில் .............................................. ஆக சேவையாற்றுவதுடன் அவரின் விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன். இப்பதவி தொடர்பாக தெரிவுசெய்யப்படுமிடத்து, இந்நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

----
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
திகதி :----.
(உத்தியோகபூர்வ முத்திரையினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.) :

8-112

---

## இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மதுவரிப் பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018 (2019)

## Open Competitive Examination for Recruitment to Post of Inspector of Excise in Excise Department of Sri Lanka - 2018 (2019)

மதுவரித் திணைக்களத்திற்கான முப்பத்தெட்டு (38) மதுவரிப் பரிசோதகர்கள் பொருட்டு இலங்கையிலுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **பதவிக்குரிய பொதுக் கடமைகள் பற்றிய விபரம்**.- மதுவரிக் கட்டளைச்சட்டம், நஞ்சு, அபின் மற்றும் அபாயகரமான ஔடதங்கள் கட்டளைச்சட்டம், புகையிலை வரிச் சட்டம் என்பவற்றிற்கேற்ப பணிகளை மேற்கொள்ளல் மற்றும் அலுவலக நிர்வாகம், மேற்பார்வைக்குரிய பணிகளை மேற்கொள்ளல்.

**சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**.- பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் ஊடான எழுத்து மூலப் போட்டிப் பரீட்சை ஒன்றை நடத்தி, அவ்வெழுத்துமூலப் பரீட்சையில் சித்தி அடையும் விண்ணப்பதாரிகளின் இயலுமையை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சையிலிருந்து பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் படியும் நிலவும் வெற்றிடங்களின் பிரகாரமும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

**எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை பற்றிய விபரம்.-**

| வினாத்தாள் | காலம் | மொத்தப்புள்ளி | சித்தி பெறுவதற்கான புள்ளி |
|---|---|---|---|
| 01. உளச்சார்பு | 02 மணி | 100 | 40% |
| 02. பொது வினாத்தாள் | 02 மணி | 100 | 40% |

**பரீட்சைக்கான விடயப் பரப்பு.-**

| வினாத்தாளின் பெயர் | விடயப் பரப்பு |
|---|---|
| 01. உளச்சார்பு | விண்ணப்பதாரியின் புத்திக்கூர்மை, பகுத்தறிவு, தீர்மானிக்கும் ஆற்றல் என்பவற்றை அளவிடுதல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. (கணிதம்/ சித்திரப் புதிர்கள், ஒத்த/ எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுதல், சொற்றொடர்/ வாக்கியம், வெற்றிடம் நிரப்புதல் என்பன இதில் உள்ளடங்குகிறது.) |
| 02. பொது வினாத்தாள் | இலங்கையிலும் உலகத்திலும் காலத்திற்குக் காலம் மற்றும் சமூக நடப்புகள் பற்றிய தகவல்களையும் பொது அறிவையும் அளவிடுதல் |

**பரீட்சை நடைபெறும் திகதி.-** இப்பரீட்சை, 2019, நவெம்பர் மாதம் கீழே அட்டவணை I இல் காட்டப்பட்டுள்ள நகரங்களில் அமைந்துள்ள பரீட்சை நிலையங்களில் நடைபெறும். பரீட்சையை பிற்போடுவதற்கான அல்லது இரத்துச் செய்வதற்கான அதிகாரத்தை மதுவரி ஆணையாளர் நாயகம் கொண்டுள்ளார்.

இப்பரீட்சை, அட்டவணை I இல் காட்டப்பட்டுள்ள நகரங்களில் அமைந்துள்ள பரீட்சை நிலையங்களில் மாத்திரம் நடைபெறும். இவ்வட்டவணையின் பிரகாரம் பரீட்சைக்குத் தோற்ற எதிர்பார்க்கும் நகரத்தைத் தெரிவு செய்ய வேண்டியதுடன் விண்ணப்பப் படிவத்தில் பரீட்சைக்குத் தோற்றும் நகரத்தையும் நகர இலக்கத்தையும் சரியாகக் குறிப்பிடல் வேண்டும்.

பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பத்தில் குறிப்பிட்ட நகரத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படாது. ஏதேனும் நகரத்தின் பரீட்சை நிலையத்திற்கு போதிய எண்ணிக்கையான விண்ணப்பதாரர்கள் இல்லாதவிடத்து அவ்விண்ணப்பதாரர்களை அவர்களின் இரண்டாவது விருப்பமாகக் குறிப்பிட்ட நகரத்திலோ அல்லது அருகிலுள்ள வேறு நகரத்திலோ அமைந்துள்ள பரீட்சை நிலையத்திற்கு குறிப்பீடு செய்யப்படுவதுடன் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பிரேரிக்கப்பட்ட சகல நகரங்களின் அல்லது கூடிய எண்ணிக்கையான நகரங்களின் பரீட்சை நிலையங்களில் போதிய எண்ணிக்கையான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்காவிடின் பரீட்சையை கொழும்பில் மாத்திரம் நடத்துவதற்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**தகைமையை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சை.-** எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களின் தகைமையை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சை ஒன்றை நடத்தி பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் தேர்ச்சி ஒழுங்கின் படியும் நிலவும் வெற்றிடங்களின் பிரகாரமும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். எனினும், ஏதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கையில் நிரப்பப்படாமை தொடர்பில் இலங்கை மதுவரித் திணைக்களத்தால் தீர்மானிக்கப்படலாம்.

தகைமையை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சையில் கீழே குறிப்பிட்ட தகைமைகளுக்கு புள்ளிகள் வழங்கப்படும்.

| புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புகள் | ஆகக்கூடிய புள்ளிகள் | தெரிவு செய்தற்கு கருத்திற் கொள்ளப்படும் ஆகக்குறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| 1. மேலதிகக் கல்வித் தகைமை பட்டப்பின் படிப்பு, பட்டப்பின் படிப்பு டிப்ளோமா, அடிப்படைத் தகைமைக்கு மேலதிகமாக பட்டத்திற்காக மற்றும் முதன்மைப் பட்டத்தின் தரச் சித்தியின் பிரகாரம் | 20 | ஏற்புடையதன்று |
| 2. மொழி ஆற்றல் | 10 | |
| 3. விளையாட்டுத் தேர்ச்சி பல்வேறு விளையாட்டு தொடர்பில் தேசிய, மாகாண, மாவட்ட, பிரதேச, பாடசாலை மட்ட விளையாட்டுக்களில் காட்டப்பட்ட அறிக்கையிடப்பட்ட தேர்ச்சி பொருட்டு | 35 | |
| 4. வேறு தேர்ச்சிகள் விசேட பயிற்சிகள் மாணவப் படைப் பயிற்சி/ தன்னார்வ சேவை/தற்காப்புப் பயிற்சி அல்லது தொழில்நுட்பப் பயிற்சி வெளியகச் செயற்பாடு | 30 | |
| 5. நேர்முகப் பரீட்சையில் காட்டிய தேர்ச்சி | 05 | |
| மொத்தம் | 100 | |

02. **சேவை நிபந்தனைகள்.-**

2.1 (i) 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிகள் சட்டத்தின் ஒழுங்குவிதிகள் மற்றும் அதன் பின்னர் செயற்பாட்டிலுள்ள ஒழுங்குவிதிகளுக்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

(ii) அரச நிர்வாகச் சுற்றறிக்கை இல. 01/2014 மற்றும் அதற்கு இணைவான சுற்றறிக்கையின்படி உரிய மட்டத்தில் மொழித் தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 1589/ 30 ஆம் இலக்க 2009.02.20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நடைமுறைகளில் காட்டப்பட்ட நிபந்தனைகள் மற்றும் தாபன விதிக்கோவை விதிமுறைகள் என்பன ஏற்புடையனவாகும்.

(iv) உடல்சார் தகைமை விண்ணப்பதாரியிடம் இருக்கிறதா என கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு முன்னர் பரிசீலிக்கப்படும்.

2.2 (i) மதுவரிப் பரிசோதகர் பதவி நிரந்தரப் பதவியொன்றாகும். மேலும், ஓய்வூதியம் தொடர்பில் அரசாங்கத்தால் எடுக்கப்படும் தீர்மானத்திற்கு நியமனம் பெறுபவர் உடன்படுதல் வேண்டும். அத்துடன் விதவைகள்/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் முறையில் நியமனம் பெறுபவர் பங்களிப்பு நிதியைச் செலுத்துதல் வேண்டும்.

(ii) நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு நிர்ப்பந்திக்கபபடலாம்.

**பயிற்சிக் காலம்.-** தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு 03 மாதப் பயிற்சி ஒன்று வழங்கப்படும். இக்காலப்பகுதியின் இறுதியில் நடத்தப்படும் பரீட்சையில் சித்தியடையாதவர்களின் பயிற்சி முடிவுறுத்தப்படும். இப்பரீட்சையில் சித்தியடையாமை, உரிய பயிலுநரின் விடயப் பரப்புக்கு அப்பாற்பட்டதென நிரூபிக்கப்பட்டால் பயிற்சிக் காலாத்தை (03) மூன்று மாதத்தினால் நீடித்து மீளவும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படலாம். பயிற்சிக் காலத்தில் பயிற்சி பெறுவோருக்கு ரூபா 10,000.00 மாதாந்த திரட்டிய படியொன்று வழங்கப்படும்.

2.3 வெற்றிகரமாக பயிற்சியைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் (03) வருட காலத்திற்கு தகுதிகாண் நிலையின் கீழ் மதுவரிப் பரிசோதகர் பதவிக்கு நியமிக்கப்படுவர். தகுதிகாண் கால இறுதியில் அவர்களால் சித்தியடைய வேண்டுமென நியமிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் உரிய பதவியில் உறுதிப்படுத்தப்படுவர். இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மதுவரிப் பரிசோதகர் பதவிக்கு நியமிக்கப்பட்டு முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை 03 வருடம் நிறைவடைவதற்கு முன்னரும் இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 06 வருடம் நிறைவடைவதற்கு முன்னரும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

2.4 அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல. 01/ 2014 மற்றும் அதற்கான திருத்தங்களுக்கு ஏற்பவும் மதுவரிப் பரிசோதகர் ஆட்சேர்ப்பு நடைமுறையின் 9.1 ஆம் பிரிவுக்கு ஏற்பவும் இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மதுவரிப் பரிசோதகர் பதவியின் உரிய மட்டத்தின் படியான பதவிக்கு இணைக்கப்பட்டு 05 வருடங்களினுள் உரிய அரச கரும மொழித் தேரச்சியைச் பெற்றிருத்தல் வேண்டும்.

2.5 தமக்கு அளிக்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய தினத்தன்று பொறுப்பேற்க இயலாதவிடத்து அத்துடன்/ அல்லது நியமிக்கப்பட்ட பதவி அல்லது நியமனம் பெற்ற பிரதேசத்தில் கடமைகளைப் பொறுப்பேற்க மறுக்கின்ற அல்லது தவறுகின்ற விண்ணப்பதாரர்களின் நியமனத்தை இரத்துச் செய்யும் அதிகாரத்தை இலங்கை மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் கொண்டுள்ளார்.

03. **மாதாந்த சம்பள அளவு**.- 03/2016 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் மதுவரிப் பரிசோதகர் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் (RS 4 - 2016) ரூபா 37,030-660 × 24 - ரூபா 52,870 ஆக உள்ளதுடன் இச்சம்பளம் தங்களுக்கு உரித்தாவது 2020.01.01 ஆந் திகதியிலிருந்தாகும். மேலே சுற்றறிக்கையின் அட்டவணை 2 இன் விதிமுறைகளின்படி நியமனம் செயல்வலுப்பெறும் திகதியில் இருந்து சம்பளம் வழங்கப்படும்.

04. **ஆட்சேர்ப்புக்கான தகைமைகள்**.-

(அ) **கல்வித் தகைமை**.-

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல்.

(ii) கணித, ஆங்கில பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் திறமைச் சித்தி பெற்றிருத்தல்.

(ஆ) **உடல்சார் தகைமை**.-

(i) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவிக்கான பணிகளை மேற்கொள்வதற்கும் போதுமான உடல், உள இயலுமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ii) ஆகக்குறைந்த உயரம் (பாதணியின்றி) 5 அடி 6 அங்குலமாக (167.6 செ. மீ.) இருத்தல் வேண்டும். மார்பின் அளவு (மூச்சு உள்வாங்காமல்) 33 அங்குலமாக (83.8 செ. மீ.) இருத்தல் வேண்டும்.

(iii) மூக்குக் கண்ணாடி அல்லது தொடுகைக் கண்ணாடிவில்லை (கொண்டாக்ட் லென்ஸ்) இன்றி பொருட்களைப் பார்க்கும் ஆற்றல் ஆகக்குறைந்தது 6/6 மற்றும் 6/12 கண்பார்வையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) **ஏனைய தகைமைகள்**.-

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர்கள் சிறந்த நல்லொழுக்கம் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

(ஈ) **வயது**.- விண்ணப்பத்தைக் கையேற்கும் இறுதித் தினத்தன்று 21 வயதுக்குக் குறையாமலும் 27 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

அதன் பிரகாரம், 1998.08.30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர், அத்துடன் 1992.08.30 ஆந் திகதி அல்லது அதற்குப் பிந்திய பிறந்த திகதியை உடையவர்கள் மாத்திரம் இங்கு விண்ணப்பிப்பதற்குத் தகைமையுடையவர்கள்.

(மதுவரித் திணைக்களத்தின் திணைக்களம் சார் பதவியில் உள்ள பட்டதாரிகளுக்கு ஏனைய தகைமைகள் இருப்பின் ஆகக்கூடிய வயதெல்லையைக் கவனத்திற் கொள்ளாது வெளியக விண்ணப்பதாரிகளாக விண்ணப்பிக்க இயலும்.)

**க. வே.**: ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பதவிக்குரிய சகல தகைமைகளையும் வர்த்தமானி அறிவித்தல் தினமான 2019.08.30 அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானது.

05. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக்கான கட்டணம் ரூபா 1,200.00 ஆகும். விண்ணப்பங்களைக் கையேற்கும் இறுதித் திகதிக்கு முன்னர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இன் கீழ் அரசிறை வருமானத்திற்கு வரவு வைக்கும் வகையில் நாட்டின் ஏதேனும் தபாற் கந்தோர்/ மாவட்ட / பிரதேச செயலகத்தில் பணத்தைச் செலுத்தி விண்ணப்பதாரரின் பெயரில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் ஒரு ஓரத்தை விண்ணப் படிவத்தின் உரிய பகுதியில் கழராதவாறு

ஒட்டுதல் வேண்டும் பரீட்சைக் கட்டணத்தின் பொருட்டு காசுக் கட்டளை அல்லது முத்திரை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பரீட்சைக்குச் செலுத்தப்பட்ட கட்டணத்தை எக்காரணத்திற்காகவும் மீளச் செலுத்தவோ அல்லது வேறு பரீட்சைக்கு மாற்றப்படவோ இயலாது. பற்றுச்சீட்டின் பிரதியை வைத்திருத்தல் பயனுடையதாகும்.

06. **விண்ணப்பிக்கும் முறை.-**

(அ) விண்ணப்பப் படிவம் இந்த அறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கு இணங்க இருத்தல் வேண்டுமென்பதுடன், தாளின் இரு பக்கத்தையும் பயன்படுத்தி ஏ4 (A4) தாளில் விண்ணப்பப் படிவத்தின் தலைப்பு இல. 1.0 முதல் 3.4 வரை முதலாம் பக்கத்திலும் ஏனையவற்றை ஏனைய பக்கங்களிலும் வருமாறு தயாரிக்கப்படலும் வேண்டும். இதற்காக கணினிப்படுத்திய/ தட்டச்சிடப்பட்ட விண்ணப்பங்களைப் பயன்படுத்தலாம். விண்ணப்பத்தின் தலைப்பில் குறிப்பிட்ட பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திலும் அத்துடன் ஆங்கிலத்திலும் குறிப்பிட வேண்டியதுடன் தமிழ் விண்ணப்பங்களில் தமிழிலும் அத்துடன் ஆங்கிலத்திலும் குறிப்பிட வேண்டும். விண்ணப்பங்களை தமது கையெழுத்தால் தெளிவாக நிரப்பப்படல் வேண்டும் என்பதுடன் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத, முழுமையற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பப்படிவங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதால் விண்ணப்பப்படிவத்தை அனுப்புவதற்கு முன்னர் அது பரீட்சை அறிவித்தலில் குறிப்பிட்ட மாதிரிக்கமைய தயாரிக்கப்பட்டுள்ளதா, சகல தகவல்களையும் உள்ளடக்கி சரியாகப் பூரணப்படுத்தப்பட்டுள்ளதா, பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா என்பதை சரிபார்த்தல் வேண்டும். மேலும், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியையும் பரீட்சைக் கட்டணப் பற்றுச்சீட்டுக்கான பிரதியையும் வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.

(ஆ) விண்ணப்பப்படிவமானது, விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்ற விரும்பும் மொழிமூலத்தில் இருத்தல் வேண்டும்.

(இ) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பதிவுத் தபாலில் 2019.08.30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் "மதுவரி ஆணையாளர் நாயகம், மதுவரித் திணைக்களம், இல. 353, கோட்டை வீதி, ராஜகிரிய" எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மதுவரிப் பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018 (2019)" எனக் குறிப்பிடல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ஈ) விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரச பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்திய ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படையினரின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட பதவியில் உள்ள அலுவலர் அல்லது அரசில் நிரந்தரப் பதவி வகிக்கும் பதவிநிலை அலுவலர் ஒருவரால் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும்.

(உ) பூர்த்தியற்ற விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் அனுப்புகையில் காணாமல் போதல், தாமதமடைதல் என்பன பற்றிய முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

(ஊ) விண்ணப்பம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படாது. பரீட்சைக்கு செலுத்தப்பட்ட கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தவோ வேறு பரீட்சைக்கு மாற்றப்படவோ முடியாது. அத்துடன் இப்பரீட்சைக்காக காசுக் கட்டளையோ முத்திரையோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

07. **பரீட்சைக்கு அனுமதித்தல்.-**

(அ) விண்ணப்பப் படிவம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்ட தகைமைகளை உடையவர்களுக்கு மாத்திரம் அறிவித்தலில் குறிப்பிட்ட வயதெல்லையின் கீழ் இருக்கும், விண்ணபத்தைக் கையேற்கும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் சரியாகப் பூரணப்படுத்திய விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். அனுமதி அட்டை வெளியிடப்பட்டவுடன் அது பற்றி பத்திரிகை அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குப் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரர்கள் அறிவித்தலில் குறிப்பிட்டவாறு அது பற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் அமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவில் விசாரித்தறிதல் வேண்டும். அவ்விசாரணையில் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், முகவரி என்பவற்றைச் சரியாகக் குறிப்பிடல் வேண்டும். கொழும்புக்கு வெளியே விண்ணப்பதாரி

இருப்பின் இவ்விபரங்களுடன் பெக்ஸ் மூலமாக அனுமதி அட்டையின் பிரதியை அனுப்பும் பொருட்டு விண்ணப்பதாரியின் பெக்ஸ் இலக்கத்தைக் குறிப்பிட்ட வேண்டுகோள் கடிதத்தை 011-2784232 இலக்கமுடைய பெக்ஸ் இன் ஊடாக பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தல் இது பற்றிய விசாரணையை மேலும் இலகுவானதாக்கும். மேலும் பரீட்சைத் திணைக்களத்தால் கேட்கப்பட்ட தகவல்களை சான்றுப்படுத்துவதற்கு விண்ணப்பதாரியிடமுள்ள விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்திற்கான பற்றுச்சீட்டின் பிரதி, பதிவுத் தபாலில் அனுப்பியதற்கான பற்றுச்சீட்டு என்பவற்றை தயார்படுத்தி வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.

(ஆ) விண்ணப்பதாரி தமக்குரிய பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் உரிய பரீட்சை நிலையத்திற்கான அனுமதி அட்டையை, கையொப்பத்தை சான்றுப்படுத்தி முதலாவதாக பரீட்சைக்குத் தோற்றும் தினத்தன்று பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் கையளித்தல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பின்பற்ற வேண்டிய சட்டவிதிகள் வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பரீட்சை நடத்துதல் சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். இச்சட்ட ஒழுங்குவிதிகள் மீறப்படின், பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் ஆளாக நேரிடும்.

குறிப்பு.- விண்ணப்பதாரிக்கு அனுமதி அட்டையை வழங்குதல், அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியானவரென ஏற்றுக்கொண்டதாக கருதப்பட முடியாது.

08. **விண்ணப்பதாரரின் ஆளடையாளம்**.- இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் நடத்தப்படும் பரீட்சைகளில் பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரி உறுதி செய்யும் பொருட்டு பின்வரும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(1) தேசிய ஆள் அடையாள அட்டை;
(2) செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு;
(3) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

09. **பிழையான தகவல் வழங்குவதற்கு தண்டனை**.- விண்ணப்பதாரருக்கு தகுதி இல்லையென வெளிப்படுத்தப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சை நடைபெறும் காலப்பகுதியிலோ அல்லது பரீட்சையின் பின்னரோ அவரின் விண்ணப்பத்தை செல்லுபடியற்றதாக்க இடமுண்டு. விண்ணப்பதாரி சமர்ப்பித்த ஏதேனும் விடயம் பிழையானதென வெளிப்படுத்தப்பட்டாலும் அல்லாவிடின் ஏதேனும் முக்கிய விடயத்தை மறைத்திருப்பாராயினும் அவரை சேவையிலிருந்து விலக்குவதற்கு நேரிடலாம். பரீட்சையை நடத்துதல், பெறுபேற்றை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். இச்சட்ட ஒழுங்குவிதிகள் மீறப்படின், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் ஆளாக நேரிடும்.

10. இவ்வொழுங்குவிதிகளில் கவனத்திற் கொள்ளப்படாத விடயங்கள் தொடர்பில் மதுவரித் திணைக்களத்தின் மதுவரி ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

11. (அ) பரீட்சை சிங்களம், தமிழ் ஆகிய மொழி மூலங்களில் நடைபெறும்.

(ஆ) விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்ற வேண்டியது, தகுதி வாய்ந்த பட்டம் பெற்ற மொழி மூலத்திலோ அல்லது அரச கரும மொழியாகவோ இருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரி தகுதி வாய்ந்த பட்டத்தின் பாடங்களை இரு மொழிகளில் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட மொழிகளில் சித்தியடைந்திருப்பின், அப்பட்டத்தில் சித்தியடைந்த பாடங்களில் ஆகக்கூடிய எண்ணிக்கையில் தோற்றிய மொழியில் அல்லது அரச கரும மொழியில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

(ஈ) பிரதான பாடம் ஒரு மொழியிலும் மேலதிக பாடம் வேறொரு மொழியிலும் சித்தியடைந்த விசேட பட்டத்தைக் கொண்ட விண்ணப்பதாரி, பிரதான பாடங்கள் சித்தி பெற்ற மொழியிலோ அல்லது அரச கரும மொழியிலோ பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

**குறிப்பு**.-

(i) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் சகல வினாப் பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும்.
(ii) தமது விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்ட மொழி மூலத்தை மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.
(iii) பரீட்சைப் பெறுபேறுகள்.- விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைப் பெறுபேறுகளை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் ஊடாக தபாலிலோ அல்லது www.results.exams.gov.lk எனும் இணையத்தின் ஊடாகவோ தெரிவிக்கப்படும்.

12. சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலில் ஏதேனும் மொழிப் பிழை அல்லது உடன்பாடின்மை காணப்படுமிடத்து சிங்கள மொழி அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

மதுவரி ஆணையாளர் நாயகம்,
இலங்கை மதுவரித் திணைக்களம்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மதுவரிப் பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018 (2019)**

Open Competitive Examination for Recruitment to Post of Inspector of Excise in Excise Department of Sri Lanka - 2018 (2019)

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்

சிங்களம் - 2
தமிழ் - 3

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

| விண்ணப்பிக்கும் நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| (i) | |
| (ii) | |

1.0 1.1 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதியிலுள்ள பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களை பின்னரும் இட்டு பெயர் : (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) (உதாரணம் : GUNAWARDHANA, H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இல. :-

2.0 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.3 அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி :----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

3.0 3.1 பிறந்த திகதி :

ஆண்டு : மாதம் : திகதி :

3.2 விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினத்தன்று வயது :

வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

3.3 தொலைபேசி இலக்கம் : (கையடக்க)

3.4 தொலைபேசி இலக்கம் : (நிலையான)

4.0 4.1 இலங்கைப் பிரசையா என்பது :-----.
(பரம்பரையாகவா, பதிவு மூலமாகவா எனக் குறிப்பிடவும்)

4.2 இனம் :-----.

4.3 திருமணமானவரா/இல்லையா :-----.

4.4 அருகிலுள்ள மதுவரி நிலையம் :-----.

4.5 கல்வித் தகைமை :

I.

| பட்டத்தின் பெயரும் வருடமும் | பல்கலைக்கழகம் | பாடங்கள் | பெற்றுள்ள தரச் சித்திகள் |
|---|---|---|---|
| | | | |

II. க. பொ. த. (சா. த.) பெறுபேறு :

| கணிதம்/ஆங்கிலம் பாடங்களிற்கான சித்தி | பரீட்சை இலக்கமும் வருடமும் |
|---|---|
| | |
| | |

(i) தற்போது தொழில் புரிபவராயின் அது பற்றிய விபரம் :----.

(ii) விளையாட்டுச் சான்றிதழ் மற்றும் வெளிச் செயற்பாடு பற்றிய விபரம் :----.

(iii) வேறு விசேட பயிற்சி பற்றிய விபரம்/தன்னார்வ ஆயுதப்படை சேவையில் இருந்திருப்பின் விபரம் :----.

(iv) உயரம் : செ. மீ. : .................. (அடி ............ அங். .................)
மார்பின் அளவு (மூச்சு உள்வாங்காமல்) செ. மீ. ................... அங். ......................

(v) குற்றவியல் தவறொன்றுக்கு எப்போதாவது நீதிமன்றமொன்றில் குற்றவாளியாக்கப்பட்டிருப்பின், அந்த தவறும், பெற்ற தண்டனையும் பற்றிய விபரங்கள் :-----.

(vi) பணம் செலுத்திய நிறுவனத்தின் பெயர் :----. பற்றுச்சீட்டு இல. : .......................

பற்றுச்சீட்டைக் கழராதவாறு இங்கு ஒட்டவும்.

5.0 இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையெனவும், சரியானவையெனவும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் விடயம் பொய்யானது அல்லது தவறானது என தெரிவு செய்யப்பட முன்னர் கண்டுபிடிக்கப்படின், இந்த பதவி பொருட்டு நான் தகைமை இழப்பிற்கு ஆளாவேன் எனவும், அத்தகைய விடயங்கள் நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்படின் நட்டஈடு இன்றி சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவேன் எனவும் நான் அறிவேன். மேலும் பரீட்சையை நடத்துதல், பெறுபேற்றை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குவிதிகளுக்கு நான் கட்டுப்படுவேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

6.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இவ் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் ..................................... எனும் பெயருடையவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும் அவர் ........................... ஆந் திகதி என் முன்னிலையில் மேலே 5 ஆம் பந்தியின் கீழ் கையொப்பமிட்டுள்ளாரென்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தி வங்கிப் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் சான்றுப்படுத்துகிறேன்.

----,
சான்றுப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :----.

சான்றுப்படுத்துபவரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(உத்தியோகபூர்வ முத்திரையால் சான்றுப்படுத்தவும்.)

7.0 (தற்போது அரசாங்க சேவையில் இணைந்துள்ள அலுவலர்களுக்கு மாத்திரம் ஏற்புடையது)

திணைக்களத் தலைவரின் சான்றுரை :

இத் திணைக்களத்தில் ............................................................ ஆக சேவையாற்றும் திரு./ திருமதி/ செல்வி .............. .............................. இனால் வழங்கப்பட்ட தகவல்களைப் பரிசீலித்துள்ளேன் என்றும் அவை சரியானவை என்றும் விண்ணப்பதாரி மேற்படி பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தகுதியைக் கொண்டிருப்பின் அவர் வகிக்கும் பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/முடியாது என்றும் சான்றுப்படுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்.)

திகதி :----.

**அட்டவணை I**

| *மாட்டவம்* | *மாவட்ட இலக்கம்* |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| அம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| வவுனியா | 12 |
| முல்லைத்தீவு | 13 |
| கிளிநொச்சி | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |
| புத்தளம் | 19 |
| அநுராதபுரம் | 20 |
| பொலநறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொணராகலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரலலை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றும் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்ரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III ஆவது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I ஆவது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III ஆவது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V ஆவது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI ஆவது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 40.00 | 60.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III ஆவது தொகுதி | 15.00 | 60.00 |
| I ஆவது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| III ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V ஆவது பகுதி | 123.00 | 60.00 |
| VI ஆவது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு**.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்**.

## அட்டவணை - 2019

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஓகத்து** | .. | வெள்ளி | 02.08.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.07.2019 |
| | | வெள்ளி | 09.08.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.07.2019 |
| | | வெள்ளி | 16.08.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.08.2019 |
| | | வெள்ளி | 23.08.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.08.2019 |
| | | வெள்ளி | 30.08.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.08.2019 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 06.09.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.08.2019 |
| | | வியாழன் | 12.09.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.08.2019 |
| | | வெள்ளி | 20.09.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.09.2019 |
| | | வெள்ளி | 27.09.2019 | .. | நண்பகல் 12 | வியாழன் | 12.09.2019 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 04.10.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.09.2019 |
| | | வெள்ளி | 11.10.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.09.2019 |
| | | வெள்ளி | 18.10.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.10.2019 |
| | | வெள்ளி | 25.10.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.10.2019 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.